ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/42 - 2013 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1816/42 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**........................................ மாநகர சபை**

*திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்*

*1989ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத் துணைவிதிகள் மேற்குறித்த பிரிவுகளின் கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மேற்குறித்த வரைவுச்சட்ட துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டமைந்த துணைவிதிகளை வரைவு செய்ய மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 267 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 129 ஆவது பிரிவு மற்றும் 272 ஆவது பிரிவின் 5 ஆவது உப பிரிவின் (ஆ) பந்தியின் மூலம் திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகளை விதிக்க மாநகர சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டத்துக்கு இயைவாகத் துணைவிதிகள் தழுவப்பட மத்திய மாகாணத்தின் மாநகர சபைகளுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*2012.05.24.*

**திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய துணை விதிகள்**

1. *இந்தத் துணைவிதிகள் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.*
2. *நகராண்மை எல்லைக்குள் பொது இடத்திலும் தனிப்பட்ட சுற்றாடலிலும் வீதியிலும் பாதைகளிலும் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப்பொருட்களை வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், போக்குவரத்துச் செய்தல், மாற்றும் நிலையங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நடத்திச் செல்லுதல், தயாரித்தல், அழுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான முன்னோடி மேற்பார்வை செய்தல், பரிசீலனை செய்தல், கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்காக இத்துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.*
3. *மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது வளவைக் கழிவுப்பொருட்கள் இல்லாத சுகாதாரமான மனங்கவரும் நிலையில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.*
4. *மாநகர சபைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது சுற்றாடலுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

செய்தல் மற்றும் வெளியேற்றச் செய்தல் வேண்டும். இன்றேல், இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அவற்றைச் செய்வித்தல் வேண்டும்.

5. (i) வளவினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் அவரது/அவளது சுற்றாடலில் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல் அல்லது வேறேதும் முறைகளைப் பயன்படுத்தி நாளாந்தம் அல்லது அதற்குக் குறைவான கால நேரத்துக்குள் சேகரித்தல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இந்தத் துணைவிதிகளின் முன்னேற்பாடான உபவிதிகளுக்கமைய சேகரிக்கும் கழிவுப் பொருட்களை 8 முதல் 20 வரை காட்டப்பட்டுள்ள துணை விதிகளுக்கமைய வேறுபடுத்துதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்வதற்கு உட்படுத்துதல் வேண்டும்.

(iii) உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் தமது கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்தவோ அல்லது அவற்றை விடுவிப்பதற்கோ பயன்படுத்தும் பை அல்லது உறை அல்லது பெரிய பாத்திரம் அல்லது ஏதேனும் கொள்கலனை 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளது ஏற்பாடுகளுக்கமையச் சேகரிப்பதற்காக நல்ல முறையில் பேணிவருதல் வேண்டும். அவை கிழிந்தோ, ஓட்டையாகியோ, உடைந்தோ அல்லது தொடர்ந்து ஈரலிப்பாகி நொய்ந்து விடுவதனாலோ அல்லது வேறெந்தக் காரணங்களாலோ நியாயமாக அவற்றைக் கையாள முடியாது உடைந்துபோகும் நிலையில் இருந்தால் அவற்றை இந்தக் கருமங்களுக்காகப் பயன்படுத்துதல் கூடாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வேண்டிக்கொள்வாராயின் சபை மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய ஒரு பகுதியை மானியமாகவோ அல்லது முழுவதையும் மானியமாகவோ இவ்வாறான கொள்கலன்களைச் சபை வழங்க முடியும்.

(iv) (i) உபவிதியின் ஏற்பாடுகளின் கீழ் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்துப் பகிரங்கப்படுத்தும் சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் முறைக்கும் நேரசூசிக்கும் அமைய உரிமையாளர்களோ அல்லது குடியிருப்பாளர்களோ அகற்றச் செய்தல் வேண்டும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், வீட்டிலுள்ளோர், விருந்தினர் அல்லது அண்டைவீட்டாரது சுகாதாரத்துக்கோ, அப்பிரதேசத்தின் சுகநல வசதிகளுக்கோ ஊறு விளைவிக்கும் வண்ணம் அபாயகரமான வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதோ களஞ்சியப்படுத்துவதோ அல்லது அகற்றுவதோ கூடாது.

6. (i) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை வீதியிலோ, பாதையிலோ, வழிகளிலோ, ஒழுங்கைகளிலோ, தெருவிலோ அல்லது ஏனைய பொது இடங்களிலோ அல்லது சுற்றாடலிலோ, வடிகானிலோ அல்லது நீரோடையிலோ, நீர்த்தேக்கத்திலோ அல்லது கடலிலோ விடுவித்துச் செல்லுதல் கூடாது.

(ii) மாநகரசபையின் பிரதேசத்துக்குள் திறந்த வெளியில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுப்பொருட்களை எவரும் எரித்தல் கூடாது.

(iii) ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய ஏதும் கழிவுப்பொருட்களை விடுவித்தல், அழுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றுவதற்காக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில், அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறினால் அவர் அந்தக் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கென அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iv) 7 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமையத் தயாரித்தல், அழுத்துதல் அல்லது அகற்றுதல் செய்யப்படாத ஏதும் கழிவுப்பொருட்கள் மேற்குறித்த (iii) ஆவது ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பாளரால் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுடன் 08 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பின்வரும் அம்சங்கள் தவிர்ந்த ஏனைய வழிகளில் கழிவுப்பொருட்களைத் தமது வளவுக்குள்ளேயே அகற்றிவிட முடியும்.

(அ) அவ்வாறான கழிவுப்பொருட்களை அகற்றுவதைச் சபை தடை செய்துள்ள பிரதேசங்கள்;
(ஆ) சபை நிர்ணயித்துள்ள சில கழிவுப்பொருள் வகைகள்.

(ii) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு மாநகர சபை ஆணையாளர் அங்கீகரித்த திட்டத்துக்கும் பிரமாணங்களுக்கும் அமையத் தயாரிக்கப்பட்ட சூளையில் அல்லது எரியூட்டியில் கழிவுப்பொருட்களை எரித்துவிட முடியும். இன்றேல், மாநகரசபை ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட முறைக்கேற்ப கழிவுப்பொருட்களை அழுத்தம் செய்வதற்கும் தயாரிப்பதற்கும் புதைப்பதற்கும் முடியும்.

(iii) ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் "கூட்டெருக் கொள்கலன்" ஒன்றைப் பெறுவதற்கென மாநகரசபை ஆணையாளர் வேண்டிக்கொண்டால் அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உரிய கூட்டெருக் கொள்கலனைப் பராமரிப்பதற்கான போதிய இடவசதியைக் கொண்டிருந்தால் அதனை உரிய வளவுக்குள் வைத்திருக்க மாநகர சபை ஆணையாளர் அனுமதி வழங்குவார்.

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வளவினுள் சேரும் "வீட்டுத்தோட்டக் கழிவுகளை" இயன்ற அளவில் மாநகரசபை ஆணையாளர் அனுமதித்த விதத்தில் தயாரிக்கவோ அழுத்தம் செய்யவோ முடியும். அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எஞ்சியிருக்கும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்களை அவற்றின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்தி நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும்.

(v) வீதியை அல்லது வழியை அடுத்துள்ள மரத்தையோ அல்லது அதன் கிளையையோ வெட்டும் ஒருவர் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துதல் வேண்டும். இன்றேல் அகற்றிடச் செய்தல் வேண்டும். அதுவுமின்றேல் சபை தீர்மானிக்கும் கொடுப்பனவொன்றைச் செய்து மாநகரசபையின் பொறுப்பாளரிடம் அவற்றைக் கையளித்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொருவரும் தமது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் ஏதேனும் விலங்குகள் வீதியில், வழியில் அல்லது பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலம் கழித்துவிட்டால் 08 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளுக்கமைய அதனைத் துப்புரவு செய்து அகற்றிவிடுவது உரியவரது பொறுப்பாகும்.

(vii) மாநகரசபைப் பிரதேசத்துக்குள் எவரும் எவ்வகையான கழிவுப்பொருட்களையும் வாகனத்திலிருந்து வீதியிலோ வழியிலோ அல்லது பொது இடங்களிலோ இட்டுச் செல்லுதல் அல்லது வைத்துவிட்டுச் செல்லுதல் கூடாது.

(viii) வீடொன்றை அல்லது வளவொன்றை நிர்மாணிக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது வளவுக்குள் உற்பத்தியாகும் திண்மக்கழிவுப்பொருட்களையும் வெளியிடும் கழிவுப்பொருட்களையும் அழுத்தும் கழிவுப்பொருட்களையும் தயாரித்துக்கொள்ளும் முறைகள் பற்றிய விளக்கங்களைத் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**வீட்டு வளவுகள்**

8. (i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் கூட்டிப் பெருக்கும் அல்லது வேறேதும் முறையினால் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் (வகைப்படுத்தி) வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள், அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இவ்வாறு வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வெவ்வேறாக உறைகளில் இட்டு, அவை அகற்றப்படும்வரை தமது வளவுக்குள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்தல் வேண்டும். உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் ஈரக்கசிவு ஏற்படாத பொருட்களால் செய்யப்பட்டதும் எலி, கிருமிகள், ஏனைய விலங்குகள் உட்செல்லாத வண்ணம் உரிய வகையில் மூடப்பட்ட கொள்கலன்களில் இட்டுவைத்தல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல்கள், உடற்பாகங்கள் அல்லது அசுத்தங்கள் போன்ற கழிவுப்பொருட்கள் அகற்றப்படவேண்டிய தன்மைக்கேற்ப பிரதேசத்துக்கு அமைவான வகையில் அவை காலத்துக்குக் காலம் மாநகரசபை தீர்மானிக்கும் கட்டணத்தை மாநகர சபையிடம் செலுத்துவதன் பேரில் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பந்தி (i) இன் (அ), (ஆ) ஆகியவற்றில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறுவாரெனில், அவர் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் உரிய கழிவுப்பொருட்களை நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். இன்றேல், ஒவ்வொரு கழிவுப்பொருளுக்குமெனச் சபை நிர்மாணித்துள்ள தாங்கிகளிலோ அல்லது உறைகளிலோ இட்டுவைத்தல் வேண்டும்.

9. (i) வாடகைக் குடியிருப்பாளர்களை அதிக அளவில் கொண்டுள்ள பல மாடிக் கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள், அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், மாநகரசபை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கமையவும் தரத்துக்கமையவும் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ செய்துகொள்ளல் வேண்டும். அவற்றைச் சுத்தமான முறையிலும் சுகாதாரமான வகையிலும் பராமரித்தல் வேண்டும்.

(iii) (i) ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் (ii) ஆவது பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய நடந்துகொள்ளத் தவறும் பட்சத்தில் மாநகரசபை ஆணையாளர் அறிவிக்கும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை வழங்கும்படி உரிமையாளரை அல்லது குடியிருப்பாளரைக் கேட்டுக்கொள்ளச் செயலாளருக்கு அதிகாரமுண்டு. மாநகரசபை ஆணையாளரது நியமங்களுக்கமையச் செயற்படுவது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது கடமையாகும்.

(iv) கட்டடமொன்றின் கீழ்த்தளத்தின் அல்லது மேற்றளத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அவற்றுக்கென வைக்கப்பட்டுள்ள உரிய கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அகற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரால் முடியும். அவ்வாறு அகற்றப்படாத பட்சத்தில் (இ), (ஈ), பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

10. (i) மாநகரசபையின் முன் அனுமதியைப் பெற்றுச் சேரிகளில் வாழும் மக்களது பயன்பாட்டுக்கென மாநகரசபை ஆணையாளர் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ கொள்கலன்களையோ இலவசமாக வழங்குவது சட்டபூர்வமானதாக அமையும்.

(ii) ஒவ்வொரு சேரி வீட்டினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களும் அவர்களது வாழிடத்தில் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் வகைப்படுத்தி, வேறாக்கி, அவர்களது வாழிடத்துக்கு மிக அண்மையில் வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இடுதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள் .

(iii) இந்தத் துணைவிதியின் (ii) ஆவது உப பிரிவில் (அ), (ஆ) தலைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக கழிவுப்பொருள் சேகரிப்பாளருக்கு அனுமதி வழங்க தலைவருக்கு அதிகாரமுண்டு

**வர்த்தக நிலையங்களும் அலுவலகங்களும்**

11. (i) வர்த்தக நிலைமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களும் ஒவ்வொரு தொகுதியிலும் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் ஒழுங்கில் வகைப்படுத்தி வேறாக்கல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) சுற்றாடலைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் கழிவுப்பொருட்கள்.

(ii) வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும்வரை வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்பட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) வர்த்தக நிலையமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iv) மேல் தளத்தில் மற்றும் கீழ்த்தளத்தில் சில வியாபார நிலையங்களையோ அல்லது அலுவலகங்களையோ கொண்டுள்ள தொகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் தலைவரால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக உரிய வர்த்தக நிலையங்கள் அல்லது அலுவலகங்களிலிருந்து வகைப்படுத்தி வேறாக்கும் கழிவுப்பொருட்களைச் சேகரிக்க அல்லது வைத்திருக்க ஒவ்வொரு வர்த்தக நிலையத்துக்கும் அல்லது அலுவலகத்துக்கும் தேவையான கழிவுப்பொருள் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை ஏற்பாடு செய்துகொடுத்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (iv) உபவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் வகைப்படுத்தி வேறாக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களைத் தனித்தனியான பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் இட்டு வைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்போரிடம் கையளிக்க ஒவ்வொரு உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்கும் உரிமையுண்டு.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் அகற்றப்படாத, இந்தத் துணைவிதியின் (i) ஆவது பிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகள் மற்றும் (ii) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகள் மூலம் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளையும் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் அவற்றை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vii) அயலவர்களுக்கும் குறித்த வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் பணியாளர்களுக்கு சுகாதார அல்லது சுகநலக்கேடு ஏற்படாதவாறு கழிவுப்பொருட்களை அகற்றும் இந்தத் துணைவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்கள் என்பவற்றைப் பராமரித்து வருவது உரிய வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர்களது பொறுப்பாகும்.

(viii) இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கான சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இவற்றின் பொருள்:

"அலுவலகம்" என்பது 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றில் பணியாற்றுவோர் பற்றிய சட்டத்தில் (129 ஆவது அத்தியாயம்) குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தமே தரும்.

"குடியிருப்பாளர்" என்பது வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வர்த்தகத்தின் அல்லது அலுவலகத்தின் பொறுப்பாளராவார்.

"வர்த்தக நிலையம்" என்பது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துக்காகப் பண்டங்களை வைத்திருக்கும் நிலையமாகும். மேலும் உணவுவகைகள், பான வகைகள் என்பவற்றை வைத்திருக்கும் நிலையமும் சிகை அலங்கார நிலையம், அழகுக்கலை நிலையம் நடத்திச் செல்லப்படும் இடம் எனவும் கொள்ளப்படும்.

**சிற்றுண்டிச்சாலைகள்**

12. (i) ஒரு சிற்றுண்டிச்சாலைக்காரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபரொருவர் தமது வளவுக்குள் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிவுசெய்து வேறாக்குதல் வேண்டும் அல்லது அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டவரும் தெரிவுசெய்து வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாகப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டவரும் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறேதும் பிராணிகள் உட்செல்வதைத் தடுக்கும் வகையில் எல்லா உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் பிளாத்திக் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட மூடிகளைக் கொண்டு பாதுகாப்பாகச் சரியாக மூடிய பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வைத்திருத்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் படி கையளிக்கப்படாத அவ்வாறான ஏதும் கழிவுப்பொருட்கள் மற்றும் (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள், அவற்றின் தன்மையைக் கருத்திற்கொண்டு சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vi) (அ) இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி அவற்றின் பொருள் இவையாகும்.

சிற்றுண்டிச்சாலை என்பது உறங்கும் வசதிகள் உள்ள அல்லது இல்லாத, பணம் செலுத்தி நுகர்வுக்காக உணவுவகைகள், பான வகைகள், மதுவகைகள் என்பவற்றை வழங்கும் நிலையம் எனப்படும். இதற்கு உணவு விடுதி, விருந்தினர் விடுதி, தங்குமிடம், வாடிவீடு, யாத்திரிகர் தங்குமிடம், சோற்றுக்கடை அல்லது சிற்றுண்டிச்சாலைக்குச் சமமான வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஒரு வளவையும் குறிப்பிடும் பொருள் கொள்ளப்படும்.

**காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

13. (i) காய்கறிகள் விற்பனை நிலையம், பழவகை விற்பனை நிலையம் ஒவ்வொன்றினதும் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருக்கும் நபர் தமது வளவுக்குள் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற காய்கறிகள், பழவகைகள் மற்றும் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) வரியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை ஈரக்கசிவு ஏற்படாத வகையில் பிளாத்திக் அல்லது உலோகத்தினாலான தனியான கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அதனுள்ளே ஈக்கல், எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் புகாத வண்ணம் உரிய வகையில் பாதுகாப்பாக மூடி வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்களைப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் (அ), (ஆ), (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களை இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கலாம்.

(iv) இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையம் என்பது காய்கறிவகைகளை அல்லது பழவகைகளைக் களஞ்சியப்படுத்தி அல்லது விற்பனைக்கு வைத்திருக்கும் நிலையம் எனப் பொருள்படும்.

**இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கூடங்கள்**

14. (i) குறித்த கருமங்களுக்கென மாநகரசபை ஆணையாளர் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எவரேனும் ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதி பெறப்பட்ட விலங்குகள் பறவைகள் தவிர ஏனைய எந்த விலங்கையோ அல்லது பறவையையோ கொல்லுதல் கூடாது.

(ii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் கொல்லப்பட முடியுமான விலங்கின் அல்லது பறவையின் வகை, கொல்லப்படும் முறை, சுத்தப்படுத்தும் முறை மனித நுகர்வுக்குப் பயன்படாத இரத்தம், குடற்பாகங்கள் மற்றும் ஏனைய பகுதிகளை அகற்றுவதற்குரிய நிபந்தனை மற்றும் சபை பொருத்தமானது எனக் கருதும் ஏனைய நிபந்தனைகளும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கவெனச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணம் ஒன்றைச் சபை அறவிடும். அந்தக் கட்டணைத்தை அனுமதிப்பத்திரம் வழங்கும்போது செலுத்துதல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழியிறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடத்தின் உரிமையாளர் அல்லது அந்த வர்த்தகத்தை நடத்திச் செல்பவர்கள் அவர்களது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற விலங்குகளின் இறந்த உடல் அல்லது இறந்த உடலின் பகுதிகள் அல்லது முட்டைகள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(v) தெரிவுசெய்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்களைத் தனியான பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் (அ) ஆவது வரியின் கீழ் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை ஈரக்கசிவு ஏற்படாத கொள்கலனுக்குள் இட்டு, அதற்குள் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் நுழையாத வகையில் சரியான முறையில் பாதுகாப்பாக மூடிவைத்தல் வேண்டும்.

(vi) இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் (அ), (ஆ), (இ) ஆவது வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களை இந்தத் துணைவிதியின் (iv) உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் துர்நாற்றம் பரவிச் செல்ல முன்னர் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(vii) இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கூடம் என்பது இந்தப் பண்டங்களை விற்பனை செய்வதற்கெனக் களஞ்சியப்படுத்தி வைக்குமிடம் அல்லது விற்பனைக்காக வைத்திருக்குமிடம் எனப்பொருள்படும்.

**நடைபாதை வியாபாரம்**

15. (i) கழிவுப்பொருட்களைத் தோற்றுவிக்கும் வியாபாரமொன்றைச் செய்துவரும் நடைபாதை வியாபாரி ஒருவர் மாநகர சபை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு அமைய அந்தக் கழிவுப் பொருட்களை இட்டுவைப்பதற்காகப் பாத்திரமொன்றையோ, கொள்கலனொன்றையோ வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுப்பொருட்கள் எவற்றையும் நடைபாதையிலும், வீதியிலும் அல்லது பொது இடங்களிலும் இட்டுவைத்தல் கூடாது.

(ii) நடைபாதை வியாபாரியொருவர் வாகனங்களினதும் பாதசாரிகளும் போக்குவரத்துக்குத் தடையேற்படும் வகையில் பாத்திரங்களையும் ஏனைய கொள்கலன்களையும் வைத்திருத்தல் கூடாது.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் மூலம் உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள், உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்.

(iv) வேறாக்கி வகைப்படுத்திய கழிவுப்பொருட்களைப் பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வேறாக இட்டுவைத்தல் வேண்டும். இந்தத் துணை விதிகளின் (ii) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது விலங்குகளால் தின்றழிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பாதுகாப்பான கொள்கலன் ஒன்றுக்குள் இட்டு வைத்திருத்தல் வேண்டும். அத்துடன், மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கல்லாது ஏனைய நேரங்களில் அதனை மூடியே வைத்திருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இந்தத் துணை விதிகளின் (iii) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் அல்லது இந்தத் துணை விதியின் (iii) ஆவது உப பிரிவின் (இ) பந்தியில் விசேடமாகக் குறிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் நாளாந்தம் கையளித்தல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ நடைபாதையில், வீதியில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முன்னர் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(vii) இந்தத் துணை விதிகளின் கருமங்களுக்கெனச் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, "நடைபாதை வியாபாரி" என்பது நடைபாதை அல்லது பாதையோரத்தில் பொருட்களை விற்பவர் அல்லது சேவைகளை வழங்குபவரைக் குறிக்கும்.

**தொழிற்சாலைகள்**

16. (i) தொழிற்சாலைகளது ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் தொழிற்சாலை வளவுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களை ஒன்றுசேர்த்துப் பின்வரும் முறைக்கேற்ப வகைப்படுத்தி வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்தத் துணைவிதிகளின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்க முடியாமற்போன கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த தொழில் முயற்சிக்கென வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகத் தொல்லை தரும் கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி "தொழிற்சாலை" என்பது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழில்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்.

**அகழ்தல், நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல்**

17. (i) வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை அகழ்தல் ஏதேனும் நிர்மாணமொன்றைக் கட்டியெழுப்புதல் அல்லது தகர்த்தலின்போது உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைப் பொருத்தமான முறையில் குறித்த வளவிலிருந்து அகற்றும்வரை வளவுக்குள்ளே மாநகரசபை ஆணையாளர் அனுமதித்த இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(ii) இந்தத் துணைவிதிகளின் (i) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கென "அகழ்தல், நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல் என்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரும்" என்பது தொழில்தருனரால் இந்தச் சேவைக்கென ஈடுபடுத்தப்படும் ஆட்களைக் குறிப்பிடும்.

"கழிவுப்பொருட்கள்" என்பது நிர்மாணித்தலின்போது கட்டடப்பொருட்களின் பயன்பாட்டின் பின் பெறப்படும் மண், சேறு, தூசு மற்றும் கழிவுப்பொருட்களையும் கட்டடங்களைத் தகர்க்கும்போது பெறப்படும் கழிவுப்பொருட்களையும் குறிப்பிடும்.

18. (i) எரிவாயு, மின்சாரம், தண்ணீர், தொலைபேசி ஆகிய வசதிகள் அல்லது ஏனைய பொது வசதிகளை வழங்கும்போது யாதேனும் வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை ஒருவர் அகழ்வதற்கு மாநகரசபை ஆணையாளரிடம் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

(ii) மேற்குறித்த (i) ஆவது விதியின் கீழ் அனுமதி வழங்கப்பட முன்னர் கழிவுப்பொருட்களை அகற்ற மேற்கொள்ளப்படவுள்ள திட்டம், உத்தேசக் கருமம் நிறைவுற்ற பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைக்கவேண்டி ஏற்படும் கழிவுப்பொருட்களை விண்ணப்பதாரி அகற்றிவிடப் பின்னிற்பாரெனின்,

அவற்றை அகற்றிவிட ஏற்படும் செலவுகள் பற்றியும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் விண்ணப்பதாரி உத்தேசமாகக் கணிக்கப்பட்ட செலவுக்குச் சமமான ஒரு தொகையை வைப்புத் தொகையாக வைத்தல் வேண்டும்.

(iii) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை முழுமையாகவோ அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ அகற்றாது விடுவாரெனின், அல்லது அகற்றுவதில் அசட்டையாக இருந்துவிடுவாரெனின், தலைவர் தீர்மானிக்கும் முறையில் குறித்த கழிவுப்பொருட்கள் அகற்றப்படுவதுடன், அதற்கெனச் செலவாகும் தொகை (ii) ஆவது உபபிரிவின்படி வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.

**மருத்துவ மனைகள்**

19. (i) மருத்துவ மனையொன்றின் உரிமையாளர் வளவுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருட்களும் ஏனைய உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களும்;
(ஆ) மீள்பாவனைக் கழிவுப்பொருட்களும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்களும்;
(இ) இந்த உபவிதியின் (ஈ) வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகை தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;
(ஈ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது உபபிரிவின் கீழ் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு, அவை அகற்றப்படும்வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i) ஆவது உபபிரிவின் (இ), (ஈ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அவற்றுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அத்துடன் அவற்றுக்கென வேறாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறித்த மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய குறித்த கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ கையளிக்க முடியும்.

(iv) இந்தத் துணைவிதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, "மருத்துவமனை" என்பது நோயொன்றினால் அல்லது இயலாமையினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது விலங்குகளைக் கையேற்று அவற்றுக்குப் பரிகாரம் செய்வது மற்றும் பரிகாரம் செய்வதற்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கெனப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த உத்தேசித்துள்ள ஏதும் வளவு (எவ்வகையில் விளக்கம் சொல்லப்பட்டாலும்) எனப்படுவதுடன், நோய் பரிகார விடுதி, கிளினிக், மருத்துவ நிலையம், மகப்பேறு மனை மற்றும் மிருக வைத்திய நிலையம் விலங்கு மருத்துவ மனை என்பனவும் இதிலடங்கும். "தொல்லைதரும் பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்" என்பது உறுப்புக்களின் பகுதிகள், குருதிக்கட்டிகள், நோய் பரவுவதற்கு இடமுள்ள மற்றும் கடுமையாகப் பரவக்கூடிய கழிவுப்பொருட்களும் மருந்து ஊசிகளும் அடங்கும்.

**ஏனைய வளவுகள்**

20. (i) 08 முதல் 19 வரையிலான துணை விதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிராத வர்த்தக முயற்சியை மேற்கொள்ளும் எவரேனும் ஒருவர் பொதுமக்களது பங்களிப்புடன் பொது, சமய, சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் அல்லது செயற்படுத்தும் ஒருவர் குறித்த செயற்பாட்டின் மூலம் அல்லது அவற்றுக்கான அமையமொன்றை நடத்திச் செல்லும்போது உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் முறைகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் ஒருவர் அந்தச் செயற்பாட்டின் காரணமாக உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கென விசேட வேலைத்திட்டத்தைக் கையளிப்பதற்கு இயலுமான வகையில் நேரகாலத்தோடு சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) தெரிந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும்வரை தனியான கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபவிதியின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் அல்லது (i) ஆவது உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

**வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

21. (i) மாநகர சபை ஆணையாளர் மாநகரசபைத் தலைவருடன் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்துடன் பின்வரும் கருமங்களைத் திட்டமிடவும், கட்டுப்படுத்தவும், நிர்வகிக்கவும் வழிவகைகள் செய்தல் வேண்டும்:-

(அ) மாநகர சபைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வழித்தடங்கள், பொது வடிகான்கள், நீர் வடிந்தோடும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகளைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் பேணிவருதல்;

(ஆ) வீதிகள், பாதைகளின் இருமருங்கிலம் மற்றும் பொது இடங்களிலும் தேவையான எண்ணிக்கையில் தொட்டிகளை வழங்கிப் பொருத்துவதும் அவற்றைப் பராமரிப்பதும்;

(இ) விழாக்காலங்களில், விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்களில் அல்லது சபை தீர்மானிக்கும் காலங்களில் குறித்த விழாக்களையோ அல்லது விசேட நிகழ்ச்சிகளையோ ஏற்பாடு செய்வோரது வேண்டுகோளின் பேரில் பொது இடங்களில் பயன்படுத்துவதற்கென நடமாடும் தொட்டிகளை வழங்குவது;

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்களைச் சுகாதாரமான முறையில் பேணிவருதலும் அவற்றின் அருகில் குடியிருப்போருக்கு அவை தொல்லையாக மாறுவதற்கு முன்னர் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் இடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுதலும்;

(உ) ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள பந்திகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்த்து அதற்கென துரிதமாகச் செயற்படுவது;

(ii) மாநகரசபை மூலம் விசேடமாக அழுக்குகள், கழிவுகளுக்கென வழங்கப்படும் தொட்டிகளில் ஈரலிப்பான, வர்த்தக, நிறுவக, கைத்தொழில் சார்ந்த அல்லது ஏனைய கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல் கூடாது.

**மாநகர சபையின் கடமைகள்**

22. (i) மாநகர சபை ஆணையாளர் மாநகரசபைத் தலைவருடன் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்துடன் பின்வரும் கருமங்களைத் திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் வேண்டும்:-

(அ) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி என்பவற்றில் பொதுமக்களை ஊக்குவித்தல்;

(ஆ) கழிவுப்பொருட்களைத் தெரிந்து வகைப்படுத்துதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக அறிவூட்டம் செய்யும் திட்டங்களைச் செய்தல் அல்லது ஊடகங்கள் வாயிலாகப் பிரசித்தப்படுத்துதல்;

(இ) மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கும் சிறிய தொழில் முயற்சியாளருக்கும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்;

(ஈ) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்படுத்துவது மற்றும் மீள்சுழற்சி செயன்முறைகளில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பது;

(ஊ) கழிவுப்பொருட்களை விடுவிக்கும் முறைகள் பற்றிய வேறு மாதிரிகளை முன்னோடியாகக் கொள்ளுதல்;

(ஊ) நகராண்மையின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு கழிவுப்பொருள் வகைக்குமென சபை தீர்மானிக்கும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள் மற்றும் கட்டணங்கள் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டுக் காட்டும் கருமக் குறிப்பொன்றைத் தயாரிப்பதுடன் விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்கள் சேகரிப்பது தொடர்பான நிபந்தனைகள் என்பவற்றையும் அத்துடன் சேர்ப்பது;

(எ) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களையும் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களையும் கருமக் குறிப்புக்கு ஏற்ப உரிய நேரத்தில் சேகரித்தல்;

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத அபாயகரமான கழிவுப்பொருட்கள் மற்றும் வேறேதும் கழிவுப்பொருட்களையும் சுகாதாரமான முறையில் கொண்டு செல்லுதல்;

(ஒ) அபாயகரமான கழிவுப்பொருட்கள் அல்லது தலைவர் பிரகடனப்படுத்திய வேறு ஏதும் கழிவுப்பொருள் வகைகள் தவிர்ந்த, வீதியைக் கூட்டிப் பெருக்கும்போதும் பொது இடங்களைத் துப்புரவு செய்யும்போதும் வடிகான்களைச் சுத்தம் செய்யும்போதும் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும் பொதுத் தொட்டிகளிலிருந்து சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும், சபையின் பணியாட்கள் சேகரிக்கும் கழிவுப்பொருட்களையும் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல்;

(ஓ) உணவு மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டு மீள்பாவனைக் கழிவுப்பொருட்களைச் செயற்பாட்டு ரீதியில் இயன்ற அளவில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ பதப்படுத்துவதற்கும் அழுத்துவதற்கும் உரிய வேலைத்திட்டங்களுடன் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் மூலம் சேகரிக்கப்பட்ட, வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும், இந்தச் செயன்முறைகளிலிருந்து நிராகரிக்கப்படும் மற்றும் இந்தக் கழிவுப்பொருட்களின் ஏனைய எச்சங்கள் என்பவற்றையும் தலைவர் அங்கீகரிக்கும் முறையொன்றுக்கு ஏற்ப வெளியேற்றவும் நடவடிக்கை எடுத்தல்;

(ஔ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தலைவர் கலந்துரையாடியபின் அங்கீகரிக்கும் முறைக்கேற்ப எல்லா அபாயகரமான கழிவுப்பொருட்களையும் அகற்றச் செய்தல்;

(க) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தையோ அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தையோ பெற்றுக்கொள்வதுடன், குறித்த அனுமதிப்பத்திரத்திலோ அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திலோ விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய கழிவுப்பொருட்களை எரியூட்டுதல் அல்லது சுகாதாரமான வகையில் தரை நிரப்புகையொன்றை நடத்திச் செல்லுதல்;

(கா) கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல், சேகரித்தல், தெரிவுசெய்தல், வகைப்படுத்துதல், போக்குவரத்து செய்தல், மாற்றுதல் மற்றும் அகற்றுதல் போன்ற கருமங்களில் ஈடுபடும் ஒவ்வொரு பணியாளருக்கும் பொருத்தமான ஆடைகள், கையுறைகள், முகமூடிகள், பாதணிகள் என்பவற்றை வழங்குதல்;

(கி) வீடு அல்லது ஏனைய வளவொன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது திருத்தியமைக்கவோ சபைக்கு விண்ணப்பித்திருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மாணம் அல்லது திருத்த வேலையின்போது உற்பத்தியாகும் திண்மக் கழிவுப்பொருட்களை அகற்றும் முறை அல்லது குறித்த வேலை தொடங்கியதும் படிப்படியாக முடிவடையும்போது சக்கைக் கற்கள் மற்றும் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும், அகற்றும் வழிமுறைகள் பற்றிய விபரங்களைப் பரிசீலித்தலும் அனுமதித்தலும்;

(கீ) சபையின் வளவுக்கென உள்ளகக் கழிவுப்பொருள் முகாமைக்குரிய திட்டமொன்றைத் தயாரித்தல்;

(கு) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய தேசிய உபாய வழிகளுக்கும் உரிய சட்டங்களுக்கும் அமையக் குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்துக்குமென விரிவான விளக்கங்கள் கொண்ட இறுதியான அகற்றுதல்கள் சம்பந்தமான எதிர்வரும் 03 ஆண்டுகள் கொண்ட கழிவுப்பொருள் முகாமையைச் செயற்படுத்தும் திட்டமொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும், அந்தத் திட்டத்தை உரிய கால எல்லைக்கு ஏற்றவாறு தொடரொழுங்கின் அடிப்படையில் சபை மூலம் வருடாந்தம் அங்கீகரித்தல்;

(கூ) (அ) விலிருந்து (கு) வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாகத் தலைவருக்குக் கிடைக்கப்பெறும் ஏதும் முறைப்பாடுகள் மீது, ஏற்படவுள்ள தொல்லைகள் பற்றியதாயின் மூன்று நாட்களுக்குள்ளும், ஏனைய முறைப்பாடுகளெனின் பதினான்கு நாட்களுக்குள்ளும் ஆய்வு செய்வதுடன் உடனடியாக நடவடிக்கை எடுப்பது.

**அனுமதிப்பத்திரங்கள்**

23. (i) கழிவுப்பொருட்களை மீள்பயன்பாட்டுக்கோ மற்றும் மீள்சுழற்சிக்கோ பயன்படுத்தும்போது அல்லது கூட்டெரு, உயிர்வாயு அல்லது வேறேதும் தயாரிப்புக்கு உட்படுத்தும் ஒருவர் பின்வரும் அம்சங்களை நிறைவு செய்வாரெனின் அவருக்குச் சபை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்க முடியும்:-

(அ) சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளுக்கேற்ப நகராண்மைப் பிரதேசத்திலோ அல்லது ஏனைய உள்ளூராட்சி அமையப் பிரதேசங்களிலோ ஏதும் தொழில் முயற்சியைச் செய்து வருதல்;

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுக்கென சபை அனுமதித்த தரத்துக்கு அமைவாக நிர்மாணிக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிக்கும் நிலையங்களை வழங்குதல்;

(ஈ) சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் மாநகரசபை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாதவாறு சுகாதாரமான முறையில் போக்குவரத்துச் செய்வதற்காக வாகன ஏற்பாடுகளைச் செய்தல்;

(உ) உரிய தொழில் முயற்சியை மாநகரசபை எல்லைக்குள் நடத்திச் செல்லும்போது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் குறித்த கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கெனக் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் கழிவுப்பொருட்களைத் தயாரிக்கும்போது அல்லது அழுத்தும்போது மிஞ்சும் எச்சங்களையோ அல்லது மறுக்கும்போது தோன்றும் துணை உற்பத்திகளாக மாற்றப்படாத கழிவுப்பொருட்களைச் சபை அனுமதித்தவாறு சபையிடம் கையளிக்க இணக்கம் தெரிவித்தல்.

(ii) அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதைச் சபை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மறுக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வேண்டிக்கொள்வாரெனின், நிராகரிப்புக்கான அல்லது மறுப்பதற்கான காரணங்களை விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்.

(iii) செல்லுபடிக் காலத்துக்குள் சேகரிப்பதற்கென மாநகரசபை ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அல்லது வகையைக் குறித்த கழிவுப்பொருளைச் சேகரிக்க அனுமதி வழங்கப்பட்ட பிரதேசம் மற்றும் ஏனைய பொருத்தமான நிபந்தனைகள் என்பவற்றை அனுமதிப்பத்திரத்தில் குறித்துக் காட்டுதல்.

(iv) இந்தத் துணைவிதியின் (1) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாத வேளைகளில் இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

(v) (iv) ஆவது துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல் அல்லது பெறுதல் கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் பொதுமக்களை அறிவூட்டுவதற்காக மாநகரசபை ஆணையாளர் ஊடகங்கள் வாயிலாகப் போதுமான அளவில் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

**கழிவுப்பொருட்கள் அகற்றப்படும் பிரதேசங்கள்**

24. கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கெனச் சபை ஒதுக்கியுள்ள பிரதேசங்களுக்குள் நுழைவதற்கு அனுமதியில்லாத எவருக்கும் முடியாது. அங்கு நடமாடவும் கூடாது. அப்பிரதேசத்தினுள் ஏதும் பொருட்களையோ அல்லது வீசப்படும் பொருட்களையோ இட்டுவைத்தல், இருக்கும் நிலையை மாற்றியமைத்தல் அல்லது அகற்றுதல் கூடாது. விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய எவரும் சபை அனுமதித்தாலன்றி காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதும் தடைசெய்யப்பட்ட கழிவுப்பொருட்களையும் இட்டுவைத்தல் கூடாது.

25. அங்கீகாரம் வழங்கும் நிபந்தனைகளுக்கமைய மாநகரசபை ஆணையாளரது மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினது எழுத்துமூல முன் அனுமதியுடனல்லாது மாநகரசபையின் எல்லைக்குள் அமைந்தள்ள காணியொன்றை அல்லது வசதியொன்றை, அதற்கு வெளியில் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களை இட்டுவைத்தலுக்கு வழங்குதல் அல்லது பயன்படுத்துதல் கூடாது.

**ஏனையவை**

26. (i) மாநகர சபை ஆணையாளர் அல்லது எழுத்துமூலம் அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு நியாயமான எந்த நேரத்திலும் ஏதேனும் ஒரு வளவுக்குள் பிரவேசிக்கவும் அதன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுகின்றாரா எனப் பரிசீலிப்பதற்கும் அதிகாரமுண்டு.

(ii) அந்த வளவின் உரிமையாளர், குடியிருப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அங்கு வசிப்பவர் அல்லது அங்கு பணிபுரிபவர் எவரேனும் மாநகரசபை ஆணையாளருக்கோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கோ தேவையான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் கீழ் மாநகரசபை ஆணையாளரோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ தமது அதிகாரங்களைப் பயன்டுத்தும்போது எவரும் அதற்குத் தடையாக இருத்தல் கூடாது.

27. சபை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய இந்தத் துணைவிதிகளைச் செயற்படுத்தும் எந்தவொரு அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கும் ஊக்குவிப்பு வழங்கப்பட முடியும்.

28. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டையோ, ஒரு சிலவற்றையோ அல்லது அனைத்தையோ மீறுவது அல்லது தகர்ப்பது குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும். இதன் கீழ் விதிக்கப்படும் எல்லாத் தண்டப் பணமும் மாநகரசபையின் நிதியில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

**சொற்பத விளக்கம்**

29. இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கெனச் சொற்பத விளக்கம் தேவைப்பாட்டாலன்றி,

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்" என்பது அவற்றை அகற்றும் ஒருவருக்கு அவற்றால் நுகர்வுப் பெறுமானம் இல்லாத மற்றும் கழிவுகள், குப்பைகள், வீதிகளைச் சுத்தம் செய்யும்போது சேரும் கழிவுப்பொருட்கள், தூசு, மணல், சேறு மற்றும் சாம்பர் எனவும்,

"உணவுக் கழிவுப்பொருட்கள்" என்பது மனித நுகர்வுக்காகப் பயன்படுத்த முடியாத இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை, காய்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப்பொருட்கள் எனவும்,

"தொல்லைதரும் கழிவுப்பொருட்கள்" என்பது மக்களது சுகாதார நலனுக்கோ சுற்றாடலுக்கோ தீங்கு விளைவிக்கும் நச்சுக்களைக் கொண்ட, தீப்பற்றக்கூடிய, எதிர்விளைவுகளைத் தரக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய, கதிரியக்கத் தன்மைகள் கொண்ட கழிவுப்பொருட்கள் எனவும்,

"சேகரித்தல்" என்பது அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர் அல்லது நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் மீள்சுழற்சி, அமுக்குதல், தயாரித்தல் அல்லது அகற்றும் வசதிகளுக்கெனப் போக்குவரத்துச் செய்வதற்காகக் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதையும்,

"கூட்டெரு" என்பது காபனேற்றுக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களது சமிபாட்டின் பின்னர் மாற்றமடையும் இறுதி விளைவுப்பொருளாகும். இது மண்ணின் தன்மையைப் பாதுகாக்கவல்ல மென்மண்ணையும்,

"செயலாளர்" என்பது நகராண்மை தொடர்பில், மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) கீழ் குறித்த நகராண்மைக்காக சட்டவரைவு மூலம் தாபிக்கப்பட்ட நகரசபையின் ஆணையாளரைக் குறிப்பதுடன், குறித்த

மாநகரசபையின் ஆணையாளராகக் கடமை செய்வதற்கு நியமிக்கப்படும் ஒருவரையும், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆணையாளரது அதிகாரங்களையும் கடமைகளையும் கருமங்களையும் செயற்படுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும், அந்த அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அளவையும்,

''களஞ்சியப்படுத்துதல்'' என்பது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது வளவுக்குள்ளே அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொது சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் அல்லது இட்டுவைத்தல் என்பதையும்,

''கட்டணம்'' என்பது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதேனும் ஒரு கட்டணத்தையும்,

''வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்'' என்பது வீட்டுத்தோட்டத்துக்குள் காணப்படும் மரங்கள் கன்றுகளிலிருந்து அகற்றப்படும் தாவரப் பகுதிகளையும், கல், மண் போன்றவற்றையும்,

''உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்'' என்பது, நுண்ணுயிர்களால் உக்கலடையச் செய்ய முடியுமான கழிவுப்பொருட்களையும்,

''பொது இடங்கள்'' என்பது பாதை, மைதானம், பொதுக் காணி, பாதைப் பாதுகாப்பிடம், விளையாட்டுத்திடல், பொதுக் கட்டடம், மயானம், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, ஏரி, நீர்த்தேக்கம், தடாகம், களப்பு, கிளை நதி, நீர் செல்லும் வழி, வடிகான், கடல், கடற்கரை அல்லது மக்கள் பொதுவாகப் பயன்படுத்தும் பொதுவான இடத்தையும்,

''மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்'' என்பது கழிவுப்பொருட்களைக் கழிவுப்பொருட்கள் என மீண்டும் அடையாளம் கண்டுகொள்ள முடியாத வண்ணம் அதன் தோற்றத்தை மாற்றுவதன் மூலம் புதிய நுகர்வுப் பண்டமொன்றை உற்பத்தி செய்யக்கூடிய கழிவுப்பொருட்களையும்,

''மீள்பாவனைக் கழிவுப்பொருட்கள்'' என்பது கழுவப்படுவதாலோ அல்லது கிருமியழித்தலினாலோ அல்லது வேறு முறைகளினாலோ சுத்தப்படுத்திய பின்னர் பயன்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களையும்,

''போக்குவரத்துச் செய்தல்'' என்பது மனித, மிருக அல்லது இயந்திர சக்தியின் மூலம் இயக்கப்படும் ஏதேனும் போக்குவரத்து ஊடகமொன்றைப் பயன்படுத்தி கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நிலையத்திலிருந்து அவற்றைத் தயாரித்தல், அமுத்துதல் அல்லது அகற்றுதல் செய்வதற்காக உள்ள இடம் வரை கொண்டு செல்வதையும்,

''தொட்டி, பாத்திரம் அல்லது கொள்கலன்'' என்பது துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கேற்றவாறு கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல், சேகரித்தல் அல்லது போக்குவரத்துச் செய்தல் என்பவற்றுக்கெனப் பயன்படுத்தும் தொட்டி, பாத்திரம், உறை, பை அல்லது ஏனைய கொள்கலன்களையும்,

''அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர்'' என்பது கழிவுப்பொருட்களைச் சேகரிக்க அல்லது பெற்றுக்கொள்ள மாநகரசபை ஆணையாளரது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள ஒருவரையும்,

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது இந்தத் துணைவிதிகளின் கீழ்வரும் கருமங்களை மேற்கொள்வதற்காக அல்லது செய்வதற்காக மாநகரசபை ஆணையாளர் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவரையும்,

''கொண்டு செல்லல்'' என்பது மீள்பாவனை செய்யப்படாத, மீள் சுழற்சி செய்யப்படாத, தயாரிக்கப்படாத, அமுத்தம் செய்யப்படாத எல்லா வகையான கழிவுப்பொருட்களையும் நிரந்தரமாக இட்டுச் செல்லக்கூடிய காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது நிலத்தின் கீழ் இட்டு வைத்தல் என்தையும்,

''மாற்றம் செய்யும் இடம்'' என்பது இந்தக் கருமத்துக்கென சபை விதிக்கும் இடம் எனக் கொள்ளப்படுவதுடன், அந்த இடத்திலிருந்து மீள்சுழற்சி செய்தல், தயாரித்தல் அமுத்துதல் அல்லது கொண்டு செல்லல் என்பவற்றுக்கென வசதியாக அமையும் வண்ணம் போக்குவரத்துச் செய்வதில் செயற்திறமையை அதிகரிக்கும் நோக்குடன் கழிவுப்பொருட்களை மிகச் சிறிய வாகனங்களைவிட மிகப் பெரிய வாகனங்களிலிருந்து அதிபெரிய வாகனங்களுக்கு மாற்றுதல் செய்வதனையும்,

“ஆள்” என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அமையம் ஒன்றையும், அல்லது ஆட்களது சங்கத்தையும் அல்லது மன்றத்தையும்,

“நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளர்” என்பது தொட்டிகள், கொள்கலன்களில் இருந்து கழிவுப்பொருட்களைக் கூட்டியெடுத்தல், சேர்த்தல், பெற்றுக்கொள்ளுதல் அல்லது அகற்றுதல் என்பவற்றுக்கென சபை ஈடுபடுத்தும் பணியாளரையும் அல்லது அந்தக் கருமத்தை நிறைவேற்றுவதற்காகச் சபையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ள நபரையும்,

“வேறாக்குதல்” என்பது இந்தத் துணைவிதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வகைகளுக்கேற்றவாறு கழிவுப்பொருட்களைப் பல்வேறு வகைகளாகத் தெரிந்து வேறாக்குவதையும்,

“தயாரித்தல்” என்பது கழிவுப்பொருட்களைப் பயனுள்ள பொருளாக மாற்றியமைக்கும் செயன்முறையையும்,

“சபை” என்பது .................... மாநகரசபையையும்,

“நகராண்மைப் பிரதேசம்” என்பது மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) கீழ் வெளிப்படுத்தப்படும் பிரதேசங்களையும்,

“சுகாதாரமான தரை நிரப்புதல்” என்பது அதனுடன் தொடர்பான சமூக, சுகாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்களைக் குறைத்துக்கொள்வதற்காக இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களுக்கமைய கழிவுப்பொருட்கள் நிலத்தில் இறுதியாக இடப்படுவதையும்,

“உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்” என்பது வளவின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அட்டோர்ணி அதிகாரத்தைக் கொண்டிருப்பவர் அல்லது உரிமையாளரால் தமது கைத்தொழிலை, தொழிற்சாலையை தோட்ட முகாமைக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதியை, அல்லது பொறுப்பாளரை அல்லது வாடகைக்குப் பெற்றிருப்பவரை அல்லது ஒருவரது கட்டளையின் கீழ் செயற்படும் முகாமையாளரையும் குறிப்பிடும்.

*07-389/1*

---

...................................... **நகர நபை**

திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்

1989ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத் துணைவிதிகள் மேற்குறித்த பிரிவுகளின் கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகின்றது.

மேற்குறித்த வரைவுச்சட்ட துணைவிதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டமைந்த துணைவிதிகளை வரைவு செய்ய நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 157 ஆவது பிரிவின் மூலம் அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள நகர சபைகளுக்கு 1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய மேற்குறித்த 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் 3 ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த சட்டத்துக்கு இயைவாகத் துணைவிதிகள் தழுவப்பட இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.

2012.05.24.

**திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய துணை விதிகள்**

1. இந்தத் துணைவிதிகள் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. நகராண்மை எல்லைக்குள் பொது இடத்திலும் தனிப்பட்ட சுற்றாடலிலும் வீதியிலும் பாதைகளிலும் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப்பொருட்களை வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், போக்குவரத்துச் செய்தல், மாற்றும் நிலையங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நடத்திச் செல்லுதல், தயாரித்தல், அழுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான முன்னோடி மேற்பார்வை செய்தல், பரிசீலனை செய்தல், கட்டுப்படுத்துதல் என்பவற்றகாக இத்துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. நகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது வளவைக் கழிவுப்பொருட்கள் இல்லாத சுகாதாரமான மனங்கவரும் நிலையில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

4. நகர சபைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது சுற்றாடலுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து செய்தல் மற்றும் வெளியேற்றச் செய்தல் வேண்டும். இன்றேல் இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அவற்றைச் செய்வித்தல் வேண்டும்.

5. (i) வளவினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் அவரது/அவளது சுற்றாடலில் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல் அல்லது வேறேதும் முறைகளைப் பயன்படுத்தி நாளாந்தம் அல்லது அதற்குக் குறைவான கால நேரத்துக்குள் சேகரித்தல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இந்தத் துணைவிதிகளின் முன்னேற்பாடான உபவிதிகளுக்கமைய சேகரிக்கும் கழிவுப் பொருட்களை 8 முதல் 20 வரை காட்டப்பட்டுள்ள துணை விதிகளுக்கமைய வேறுபடுத்துதல் வேண்டும் அல்லது அவ்வாறு செய்வதற்கு உட்படுத்துதல் வேண்டும்.

(iii) உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் தமது கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்தவோ அல்லது அவற்றை விடுவிப்பதற்கோ பயன்படுத்தும் பை அல்லது உறை அல்லது பெரிய பாத்திரம் அல்லது ஏதேனும் கொள்கலனை 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளது ஏற்பாடுகளுக்கமையச் சேகரிப்பதற்காக நல்ல முறையில் பேணிவருதல் வேண்டும். அவை கிழிந்தோ, ஓட்டையாகியோ உடைந்தோ அல்லது தொடர்ந்து ஈரலிப்பாகி நொய்ந்து விடுவதனாலோ அல்லது வேறெந்தக் காரணங்களாலோ நியாயமாக அவற்றைக் கையாள முடியாது உடைந்துபோகும் நிலையில் இருந்தால் அவற்றை இந்தக் கருமங்களுக்காகப் பயன்படுத்துதல் கூடாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வேண்டிக்கொள்வாராயின் சபை மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய ஒரு பகுதியை மானியமாகவோ அல்லது முழுவதையும் மானியமாகவோ இவ்வாறான கொள்கலன்களைச் சபை வழங்க முடியும்.

(iv) (i) உபவிதியின் ஏற்பாடுகளின் கீழ் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்துப் பகிரங்கப்படுத்தும் சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் முறைக்கும் நேரசூசிக்கும் அமைய உரிமையாளர்களோ அல்லது குடியிருப்பாளர்களோ அகற்றச் செய்தல் வேண்டும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், வீட்டிலுள்ளோர், விருந்தினர் அல்லது அண்டைவீட்டாரது சுகாதாரத்துக்கோ, அப்பிரதேசத்தின் சுகநல வசதிகளுக்கோ ஊறு விளைவிக்கும் வண்ணம் அபாயகரமான வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதோ களஞ்சியப்படுத்துவதோ அல்லது அகற்றுவதோ கூடாது.

6. (i) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை வீதியிலோ, பாதையிலோ, வழிகளிலோ, ஒழுங்கைகளிலோ, தெருவிலோ அல்லது ஏனைய பொது இடங்களிலோ அல்லது சுற்றாடலிலோ, வடிகானிலோ அல்லது நீரோடையிலோ, நீர்த்தேக்கத்திலோ அல்லது கடலிலோ விடுவித்துச் செல்லுதல் கூடாது.

(ii) நகரசபையின் பிரதேசத்துக்குள் திறந்த வெளியில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுப்பொருட்களை எவரும் எரித்தல் கூடாது.

(iii) ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய ஏதும் கழிவுப்பொட்களை விடுவித்தல், அழுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றுவதற்காக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில், அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறினால் அவர் அந்தக் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கென அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iv) 07 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமையத் தயாரித்தல், அழுத்துதல் அல்லது அகற்றுதல் செய்யப்படாத ஏதும் கழிவுப்பொருட்கள் மேற்குறித்த (iii) ஆவது ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பாளரால் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுடன் 08 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பின்வரும் அம்சங்கள் தவிர்ந்த ஏனைய வழிகளில் கழிவுப்பொருட்களைத் தமது வளவுக்குள்ளேயே அகற்றிவிட முடியும்:-

(அ) அவ்வாறான கழிவுப்பொருட்களை அகற்றுவதைச் சபை தடை செய்துள்ள பிரதேசங்கள்;
(ஆ) சபை நிர்ணயித்துள்ள சில கழிவுப்பொருள் வகைகள்.

(ii) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு தலைவர் அங்கீகரித்த திட்டத்துக்கும் பிரமாணங்களுக்கும் அமையத் தயாரிக்கப்பட்ட சூளையில் அல்லது எரியூட்டியில் கழிவுப்பொருட்களை எரித்துவிட முடியும். இன்றேல், தலைவரால் அனுமதிக்கப்பட்ட முறைக்கேற்ப கழிவுப்பொருட்களை அழுத்தம் செய்வதற்கும் தயாரிப்பதற்கும் புதைப்பதற்கும் முடியும்.

(iii) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் "கூட்டெருக் கொள்கலன்" ஒன்றைப் பெறுவதற்கென தலைவரிடம் வேண்டிக்கொண்டால் அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உரிய கூட்டெருக் கொள்கலனைப் பராமரிப்பதற்கான போதிய இடவசதியைக் கொண்டிருந்தால் அதனை உரிய வளவுக்குள் வைத்திருக்க தலைவர் அனுமதி வழங்குவார்.

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வளவினுள் சேரும் "வீட்டுத்தோட்டக் கழிவுகளை" இயன்ற அளவில் தலைவர் அனுமதித்த விதத்தில் தயாரிக்கவோ அழுத்தம் செய்யவோ முடியும். அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எஞ்சியிருக்கும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்களை அவற்றின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்தி நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும்.

(v) வீதியை அல்லது வழியை அடுத்துள்ள மரத்தையோ அல்லது அதன் கிளையையோ வெட்டும் ஒருவர் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துதல் வேண்டும். இன்றேல் அகற்றிடச் செய்தல் வேண்டும். அதுவுமின்றேல் சபை தீர்மானிக்கும் கொடுப்பனவொன்றைச் செய்து நகர சபையின் பொறுப்பாளரிடம் அவற்றைக் கையளித்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொருவரும் தமது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் ஏதேனும் விலங்குகள் வீதியில், வழியில் அல்லது பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலம் கழித்துவிட்டால் 08 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளுக்கமைய அதனைத் துப்புரவு செய்து அகற்றிவிடுவது உரியவரது பொறுப்பாகும்.

(vii) மாநகரசபைப் பிரதேசத்துக்குள் எவரும் எவ்வகையான கழிவுப்பொருட்களையும் வாகனத்திலிருந்து வீதியிலோ வழியிலோ அல்லது பொது இடங்களிலோ இட்டுச் செல்லுதல் அல்லது வைத்துவிட்டுச் செல்லுதல் கூடாது.

(viii) வீடொன்றை அல்லது வளவொன்றை நிர்மாணிக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது வளவுக்குள் உற்பத்தியாகும் திண்மக்கழிவுப்பொருட்களையும் வெளியிடும் கழிவுப்பொருட்களையும் அழுத்தும் கழிவுப்பொருட்களையும் தயாரித்துக்கொள்ளும் முறைகள் பற்றிய விளக்கங்களைத் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**வீட்டு வளவுகள்**

8. (i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் கூட்டிப் பெருக்கும் அல்லது வேறேதும் முறையினால் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் (வகைப்படுத்தி) வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள், அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இவ்வாறு வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வெவ்வேறாக உறைகளில் இட்டு, அவை அகற்றப்படும்வரை தமது வளவுக்குள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்தல் வேண்டும். உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் ஈரக்கசிவு ஏற்படாத பொருட்களால் செய்யப்பட்டதும் எலி, கிருமிகள் ஏனைய விலங்குகள் உட்செல்லாத வண்ணம் உரிய வகையில் மூடப்பட்ட கொள்கலன்களில் இட்டுவைத்தல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல்கள், உடற்பாகங்கள் அல்லது அசுத்தங்கள் போன்ற கழிவுப்பொருட்கள் அகற்றப்படக்வேண்டிய தன்மைக்கேற்ப பிரதேசத்துக்கு அமைவான வகையில் அவை காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணத்தை சபையிடம் செலுத்துவதன் பேரில் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பந்தி (i) இன் (அ), (ஆ) ஆகியவற்றில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறுவாரெனில், அவர் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் உரிய கழிவுப்பொருட்களை நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். இன்றேல், ஒவ்வொரு கழிவுப்பொருளுக்குமெனச் சபை நிர்மாணித்துள்ள தாங்கிகளிலோ அல்லது உறைகளிலோ இட்டுவைத்தல் வேண்டும்.

9. (i) வாடகைக் குடியிருப்பாளர்களை அதிக அளவில் கொண்டுள்ள பல மாடிக் கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடல் பாகங்கள், அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கமையவும் தரத்துக்கு அமையவும் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ செய்துகொள்ளல் வேண்டும். அவற்றைச் சுத்தமான முறையிலும் சுகாதாரமான வகையிலும் பராமரித்தல் வேண்டும்.

(iii) (i) ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் (ii) ஆவது பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய நடந்துகொள்ளத் தவறும் பட்சத்தில் தலைவர் அறிவிக்கும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை வழங்கும்படி உரிமையாளரை அல்லது குடியிருப்பாளரைக் கேட்டுக்கொள்ளச் செயலாளருக்கு அதிகாரமுண்டு. தலைவரது நியமங்களுக்கமையச் செயற்படுவது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது கடமையாகும்.

(iv) கட்டடமொன்றின் கீழ்த்தளத்தின் அல்லது மேற்றளத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அவற்றுக்கென வைக்கப்பட்டுள்ள உரிய கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அகற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரால் முடியும். அவ்வாறு அகற்றப்படாத பட்சத்தில் (இ), (ஈ), பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

10. (i) நகரசபையின் முன் அனுமதியைப் பெற்றுச் சேரிகளில் வாழும் மக்களது பயன்பாட்டுக்கென தலைவர் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ கொள்கலன்களையோ இலவசமாக வழங்குவது சட்டபூர்வமானதாக அமையும்.

(ii) ஒவ்வொரு சேரி வீட்டினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களும் அவர்களது வாழிடத்தில் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் வகைப்படுத்தி, வேறாக்கி, அவர்களது வாழிடத்துக்கு மிக அண்மையில் வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இடுதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்.

(iii) இந்தத் துணைவிதியின் (ii) ஆவது உப பிரிவில் (அ), (ஆ) தலைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக கழிவுப்பொருள் சேகரிப்பாளருக்கு அனுமதி வழங்க தலைவருக்கு அதிகாரமுண்டு.

**வர்த்தக நிலையங்களும் அலுவலகங்களும்**

11. (i) வர்த்தக நிலைமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களும் ஒவ்வொரு தொகுதியிலும் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் ஒழுங்கில் வகைப்படுத்தி வேறாக்கல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) சுற்றாடலைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் கழிவுப்பொருட்கள்.

(ii) வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும்வரை வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்பட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) வர்த்தக நிலையமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iv) மேல் தளத்தில் மற்றும் கீழ்த்தளத்தில் சில வியாபார நிலையங்களையோ அல்லது அலுவலகங்களையோ கொண்டுள்ள தொகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் தலைவரால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக உரிய வர்த்தக நிலையங்கள் அல்லது அலுவலகங்களிலிருந்து வகைப்படுத்தி வேறாக்கும் கழிவுப்பொருட்களைச் சேகரிக்க அல்லது வைத்திருக்க ஒவ்வொரு வர்த்தக நிலையத்துக்கும் அல்லது அலுவலகத்துக்கும் தேவையான கழிவுப்பொருள் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை ஏற்பாடு செய்துகொடுத்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (iv) உபவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் வகைப்படுத்தி வேறாக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களைத் தனித்தனியான பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் இட்டு வைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்போரிடம் கையளிக்க ஒவ்வொரு உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்கும் உரிமையுண்டு.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் அகற்றப்படாத, இந்தத் துணைவிதியின் (i) ஆவது பிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகள் மற்றும் (ii) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகள் மூலம் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளையும் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் தலைவரிடம் செலுத்துவதன் பேரில் அவற்றை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vii) அயலவர்களுக்கும் குறித்த வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் பணியாளர்களுக்கு சுகாதார அல்லது சுகநலக்கேடு ஏற்படாதவாறு கழிவுப்பொருட்களை அகற்றும் இந்தத் துணைவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்கள் என்பவற்றைப் பராமரித்து வருவது உரிய வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர்களது பொறுப்பாகும்.

(viii) இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கான சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இவற்றின் பொருள்:

“அலுவலகம்” என்பது 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றில் பணியாற்றுவோர் பற்றிய சட்டத்தின் (129 ஆவது அத்தியாயத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தமே தரும்.

“குடியிருப்பாளர்” என்பது வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வர்த்தகத்தின் அல்லது அலுவலகத்தின் பொறுப்பாளராவார்.

“வர்த்தக நிலையம்” என்பது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துக்காகப் பண்டங்களை வைத்திருக்கும் நிலையமாகும். மேலும் உணவுவகைகள், பான வகைகள் என்பவற்றை வைத்திருக்கும் நிலையமும் சிகை அலங்கார நிலையம், அழகுக்கலை நிலையம் நடத்திச் செல்லப்படும் இடம் எனவும் கொள்ளப்படும்.

**சிற்றுண்டிச்சாலைகள்**

12. (i) ஒரு சிற்றண்டிச்சாலைக்காரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபரொருவர் தமது வளவுக்குள் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிவுசெய்து வேறாக்குதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலு அதிகாரம் வழங்கப்பட்டவரும் தெரிவுசெய்து வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாகப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டவரும் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறேதும் பிராணிகள் உட்செல்வதைத் தடுக்கும் வகையில் எல்லா உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் பிளாத்திக் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட மூடிகளைக் கொண்டு பாதுகாப்பாகச் சரியாக மூடிய பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வைத்திருத்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் படி கையளிக்கப்படாத அவ்வாறான ஏதும் கழிவுப்பொருட்கள் மற்றும் (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள், அவற்றின் தன்மையைக் கருத்திற்கொண்டு சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vi) (அ) இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி அவற்றின் பொருள் இவையாகும்.

“சிற்றுண்டிச்சாலை” என்பது உறங்கும் வசதிகள் உள்ள அல்லது இல்லாத, பணம் செலுத்தி நுகர்வுக்காக உணவுவகைகள், பான வகைகள், மதுவகைகள் என்பவற்றை வழங்கும் நிலையம் எனப்படும். இதற்கு உணவு விடுதி, விருந்தினர் விடுதி, தங்குமிடம், வாடிவீடு, யாத்திரிகர் தங்குமிடம், சோற்றுக்கடை அல்லது சிற்றுண்டிச்சாலைக்குச் சமமான வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஒரு வளவையும் குறிப்பிடும் பொருள் கொள்ளப்படும்.

**காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

13. (i) காய்கறிகள் விற்பனை நிலையம், பழவகை விற்பனை நிலையம் ஒவ்வொன்றினதும் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருக்கும் நபர் தமது வளவுக்குள் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற காய்கறிகள், பழவகைகள் மற்றும் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) வரியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை ஈரக்கசிவு ஏற்படாத வகையில் பிளாத்திக் அல்லது உலோகத்தினாலான தனியான கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அதனுள்ளே ஈக்கல், எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் புகாத வண்ணம் உரிய வகையில் பாதுகாப்பாக மூடி வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்களைப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் (அ), (ஆ), (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களை இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்துத சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கலாம்.

(iv) இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையம் என்பது காய்கறிவகைகளை அல்லது பழவகைகளைக் களஞ்சியப்படுத்தி அல்லது விற்பனைக்கு வைத்திருக்கும் நிலையம் எனப் பொருள்படும்.

**இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கூடங்கள்**

14. (i) குறித்த கருமங்களுக்கென தலைவர் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எவரேனும் ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதி பெறப்பட்ட விலங்குகள் பறவைகள் தவிர ஏனைய எந்த விலங்கையோ அல்லது பறவையையோ கொல்லுதல் கூடாது.

(ii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் கொல்லப்பட முடியுமான விலங்கின் அல்லது பறவையின் வகை, கொல்லப்படும் முறை, சுத்தப்படுத்தும் முறை, மனித நுகர்வுக்குப் பயன்படாத இரத்தம், குடற்பாகங்கள் மற்றும் ஏனைய பகுதிகளை அகற்றுவதற்குரிய நிபந்தனை மற்றும் சபை பொருத்தமானது எனக் கருதும் ஏனைய நிபந்தனைகளும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கவெனச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணம் ஒன்றைச் சபை அறவிடும். அந்தக் கட்டணத்தை அனுமதிப்பத்திரம் வழங்கும்போது செலுத்துதல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழியிறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடத்தின் உரிமையாளர் அல்லது அந்த வர்த்தகத்தை நடத்திச் செல்பவர்கள் அவர்களது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற விலங்குகளின் இறந்த உடல் அல்லது இறந்த உடலின் பகுதிகள் அல்லது முட்டைகள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(v) தெரிவுசெய்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்களைத் தனியான பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் (அ) ஆவது வரியின் கீழ் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை ஈரக்கசிவு ஏற்படாத கொள்கலனுக்குள் இட்டு, அதற்குள் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் நுழையாத வகையில் சரியான முறையில் பாதுகாப்பாக மூடிவைத்தல் வேண்டும்.

(vi) இந்தத் துணைவிதியின் (vi) ஆவது உபபிரிவின் (அ), (ஆ), (இ) ஆவது வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களை இந்தத் துணைவிதியின் (iv) உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் துர்நாற்றம் பரவிச் செல்ல முன்னர் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(vii) இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கூடம் என்பது இந்தப் பண்டங்களை விற்பனை செய்வதற்கெனக் களஞ்சியப்படுத்தி வைக்குமிடம் அல்லது விற்பனைக்காக வைத்திருக்குமிடம் எனப்பொருள்படும்.

**நடைபாதை வியாபாரம்**

15. (i) கழிவுப்பொருட்களைத் தோற்றுவிக்கும் வியாபாரமொன்றைச் செய்துவரும் நடைபாதை வியாபாரி ஒருவர் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு அமைய அந்தக் கழிவுப் பொருட்களை இட்டுவைப்பதற்காகப் பாத்திரமொன்றையோ, கொள்கலனொன்றையோ வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுப்பொருட்கள் எவற்றையும் நடைபாதையிலும், வீதியிலும் அல்லது பொது இடங்களிலும் இட்டுவைத்தல் கூடாது.

(ii) நடைபாதை வியாபாரியொருவர் வாகனங்களினதும் பாதசாரிகளும் போக்குவரத்துக்குத் தடையேற்படும் வகையில் பாத்திரங்களையும் ஏனைய கொள்கலன்களையும் வைத்திருத்தல் கூடாது.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் மூலம் உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள், உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்.

(iv) வேறாக்கி வகைப்படுத்திய கழிவுப்பொருட்களைப் பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வேறாக இட்டுவைத்தல் வேண்டும். இந்தத் துணை விதிகளின் (ii) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது விலங்குகளால் தின்றழிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பாதுகாப்பான கொள்கலன் ஒன்றுக்குள் இட்டு வைத்திருத்தல் வேண்டும். அத்துடன், மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கல்லாது ஏனைய நேரங்களில் அதனை மூடியே வைத்திருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இந்தத் துணை விதிகளின் (iii) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் அல்லது இந்தத் துணை விதியின் (iii) ஆவது உப பிரிவின் (இ) பந்தியில் விசேடமாகக் குறிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் நாளாந்தம் கையளித்தல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ நடைபாதையில், வீதியில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முன்னர் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(vii) இந்தத் துணை விதிகளின் கருமங்களுக்கெனச் சொற்பத விளக்கத் தேவைப்பட்டாலன்றி, "நடைபாதை வியாபாரி" என்பது நடைபாதை அல்லது பாதையோரத்தில் பொருட்களை விற்பவர் அல்லது சேவைகளை வழங்குபவரைக் குறிக்கும்.

**தொழிற்சாலைகள்**

16. (i) தொழிற்சாலைகளது ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் தொழிற்சாலை வளவுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களை ஒன்றுசேர்த்துப் பின்வரும் முறைக்கேற்ப வகைப்படுத்தி வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்தத் துணைவிதிகளின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்க முடியாமற்போன கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த தொழில் முயற்சிக்கென வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகத் தொல்லை தரும் கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி "தொழிற்சாலை" என்பது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழில்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்.

**அகழ்தல், நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல்**

17. (i) வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை அகழ்தல் ஏதேனும் நிர்மாணமொன்றைக் கட்டியெழுப்புதல் அல்லது தகர்த்தலின்போது உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைப் பொருத்தமான முறையில் குறித்த வளவிலிருந்து அகற்றும்வரை வளவுக்குள்ளே தலைவர் அனுமதித்த இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(ii) இந்தத் துணைவிதிகளின் (i) ஆவது உபபிரில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கென "அகழ்தல் நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல் என்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரும்" என்பது தொழில் தருனரால் இந்தச் சேவைக்கென ஈடுபடுத்தப்படும் ஆட்களைக் குறிப்பிடும்.

"கழிவுப்பொருட்கள்" என்பது நிர்மாணித்தலின்போது கட்டடப்பொருட்களின் பயன்பாட்டின் பின் பெறப்படும் மண், சேறு, தூசு மற்றும் கழிவுப்பொருட்களையும் கட்டடங்களைத் தகர்க்கும்போது பெறப்படும் கழிவுப்பொருட்களையும் குறிப்பிடும்.

18. (i) எரிவாயு, மின்சாரம், தண்ணீர், தொலைபேசி ஆகிய வசதிகள் அல்லது ஏனைய பொது வசதிகளை வழங்கும்போது யாதேனும் வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை ஒருவர் அகழ்வதற்கு தலைவரிடம் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

(ii) மேற்குறித்த (i) ஆவது விதியின் கீழ் அனுமதி வழங்கப்பட முன்னர் கழிவுப்பொருட்களை அகற்ற மேற்கொள்ளப்படவுள்ள திட்டம், உத்தேச கருமம் நிறைவுற்ற பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைக்கவேண்டி ஏற்படும் கழிவுப்பொருட்களை விண்ணப்பதாரி அகற்றிவிடப் பின்னிற்பாரெனின், அவற்றை அகற்றிவிட ஏற்படும் செலவுகள் பற்றியும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் விண்ணப்பதாரி உத்தேசமாகக் கணிக்கப்பட்ட செலவுக்குச் சமமான ஒரு தொகையை வைப்புத் தொகையாக வைத்தல் வேண்டும்.

(iii) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை முழுமையாகவோ அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ அகற்றாது விடுவாரெனின், அல்லது அகற்றுவதில் அசட்டையாக இருந்துவிடுவாரெனின், தலைவர் தீர்மானிக்கும் முறையில் குறித்த கழிவுப்பொருட்கள் அகற்றப்படுவதுடன், அதற்கெனச் செலவாகும் தொகை (ii) ஆவது உபபிரிவின்படி வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.

**மருத்துவ மனைகள்**

19. (i) மருத்துவ மனையொன்றின் உரிமையாளர் வளவுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருட்களும் ஏனைய உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களும்;
(ஆ) மீள்பாவனைக் கழிவுப்பொருட்களும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்களும்;
(இ) இந்த உபவிதியின் (ஈ) வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகை தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;
(ஈ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது உபபிரிவின் கீழ் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு, அவை அகற்றப்படும்வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i) ஆவது உபபிரிவின் கீழ் (இ), (ஈ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அவற்றுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அத்துடன் அவற்றுக்கென வேறாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறித்த மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய குறித்த கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ கையளிக்க முடியும்.

(iv) இந்தத் துணைவிதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, "மருத்துவமனை" என்பது நோயொன்றினால் அல்லது இயலாமையினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது விலங்குகளைக் கையேற்று அவற்றுக்குப் பரிகாரம் செய்வது மற்றும் பரிகாரம் செய்வதற்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கெனப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த உத்தேசித்துள்ள ஏதும் வளவு (எவ்வகையில் விளக்கம் சொல்லப்பட்டாலும்) எனப்படுவதுடன், நோய் பரிகார விடுதி, கிளினிக், மருத்துவ நிலையம், மகப்பேறு மனை மற்றும் மிருக வைத்திய நிலையம், விலங்கு மருத்துவ மனை என்பனவும் இதிலடங்கும். "தொல்லைதரும் பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்" என்பது உறுப்புக்களின் பகுதிகள், குருதிக்கட்டிகள், நோய் பரவுவதற்கு இடமுள்ள மற்றும் கடுமையாகப் பரவக்கூடிய கழிவுப்பொருட்களும் மருந்து ஊசிகளும் அடங்கும்.

**ஏனைய வளவுகள்**

20. (i) 08 முதல் 19 வரையிலான துணை விதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிராத வர்த்தக முயற்சியை மேற்கொள்ளும் எவரேனும் ஒருவர் பொதுமக்களது பங்களிப்புடன் பொது, சமய, சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் அல்லது செயற்படுத்தும் ஒருவர் குறித்த செயற்பாட்டின் மூலம் அல்லது அவற்றுக்கான அமையமொன்றை நடத்திச் செல்லும்போது உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் முறைகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள் ;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் ஒருவர் அந்தச் செயற்பாட்டின் காரணமாக உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கென விசேட வேலைத்திட்டத்தைக் கையளிப்பதற்கு இயலுமான வகையில் நேரகாலத்தோடு சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) தெரிந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும்வரை தனியான கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபவிதியின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் அல்லது (i) ஆவது உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

**வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

21. (i) தலைவர் சபையில் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பின்வரும் கருமங்களைத் திட்டமிடவும், கட்டுப்படுத்தவும், நிர்வகிக்கவும் வழிவகைகள் செய்தல் வேண்டும்:-

(அ) நகர சபைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வழித்தடங்கள், பொது வடிகான்கள், நீர் வடிந்தோடும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகளைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் பேணிவருதல்;

(ஆ) வீதிகள், பாதைகளின் இருமருங்கிலும் மற்றும் பொது இடங்களிலும் தேவையான எண்ணிக்கையில் தொட்டிகளை வழங்கிப் பொருத்துவதும் அவற்றைப் பராமரிப்பதும்;

(இ) விழாக்காலங்களில், விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்களில் அல்லது சபை தீர்மானிக்கும் காலங்களில் குறித்த விழாக்களையோ அல்லது விசேட நிகழ்ச்சிகளையோ ஏற்பாடு செய்வோரது வேண்டுகோளின் பேரில் பொது இடங்களில் பயன்படுத்துவதற்கென நடமாடும் தொட்டிகளை வழங்குவது;

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்களைச் சுகாதாரமான முறையில் பேணிவருதலும் அவற்றின் அருகில் குடியிருப்போருக்கு அவை தொல்லையாக மாறுவதற்கு முன்னர் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் இடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுதலும்;

(உ) ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள பந்திகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்த்து அதற்கென துரிதமாகச் செயற்படுவது.

(ii) நகரசபை மூலம் விசேடமாக அழுக்குகள், கழிவுகளுக்கென வழங்கப்படும் தொட்டிகளில் ஈரலிப்பான, வர்த்தக, நிறுவக, கைத்தொழில் சார்ந்த அல்லது ஏனைய கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல் கூடாது.

**நகர சபையின் கடமைகள்**

22. (i) தலைவர் நகரசபையில் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்துடன் பின்வரும் கருமங்களைத் திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் வேண்டும் :-

(அ) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி என்பவற்றில் பொதுமக்களை ஊக்குவித்தல் ;

(ஆ) கழிவுப்பொருட்களைத் தெரிந்து வகைப்படுத்துதல் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக அறிவூட்டம் செய்யும் திட்டங்களைச் செய்தல் அல்லது ஊடகங்கள் வாயிலாகப் பிரசித்தப்படுத்துதல் ;

(இ) மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கும் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(ஈ) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்படுத்துவது மற்றும் மீள்சுழற்சி செயன்முறைகளில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பது ;

(உ) கழிவுப்பொருட்களை விடுவிக்கும் முறைகள் பற்றிய வேறு மாதிரிகளை முன்னோடியாகக் கொள்ளுதல் ;

(ஊ) நகராண்மையின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு கழிவுப்பொருள் வகைக்குமென சபை தீர்மானிக்கும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள் மற்றும் கட்டணங்கள் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டுக் காட்டும் கருமக் குறிப்பொன்றைத் தயாரிப்பதுடன் விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்கள் சேகரிப்பது தொடர்பான நிபந்தனைகள் என்பவற்றையும் அத்துடன் சேர்ப்பது;

(எ) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களையும் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களையும் கருமக் குறிப்புக்கு ஏற்ப உரிய நேரத்தில் சேகரித்தல்;

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத அபாயகரமான கழிவுப்பொருட்கள் மற்றும் வேறேதும் கழிவுப்பொருட்களையும் சுகாதாரமான முறையில் கொண்டு செல்லுதல்;

(ஐ) அபாயகரமான கழிவுப்பொருட்கள் அல்லது தலைவர் பிரகடனப்படுத்திய வேறு ஏதும் கழிவுப்பொருள் வகைகள் தவிர்ந்த, வீதியைக் கூட்டிப் பெருக்கும்போதும் பொது இடங்களைத் துப்புரவு செய்யும்போதும் வடிகான்களைச் சுத்தம் செய்யும்போதும் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும் பொதுத் தொட்டிகளிலிருந்து சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும், சபையின் பணியாட்கள் சேகரிக்கும் கழிவுப்பொருட்களையும் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல்;

(ஒ) உணவு மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டு மீள்பாவனைக் கழிவுப்பொருட்களைச் செயற்பாட்டு ரீதியில் இயன்ற அளவில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ பதப்படுத்துவதற்கும் அழுத்துவதற்கும் உரிய வேலைத்திட்டங்களுடன் நகராண்மைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் மூலம் சேகரிக்கப்பட்ட, வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும், இந்தச் செயன்முறைகளிலிருந்து நிராகரிக்கப்படும் மற்றும் இந்தக் கழிவுப்பொருட்களின் ஏனைய எச்சங்கள் என்பவற்றையும் தலைவர் அங்கீகரிக்கும் முறையொன்றுக்கு ஏற்ப வெளியேற்றவும் நடவடிக்கை எடுத்தல்;

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தலைவர் கலந்துரையாடிய பின் அங்கீகரிக்கும் முறைக்கேற்ப எல்லா அபாயகரமான கழிவுப்பொருட்களையும் அகற்றச் செய்தல்;

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத் திரத்தையோ அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தையோ பெற்றுக்கொள்வதுடன், குறித்த அனுமதிப்பத்திரத்திலோ அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திலோ விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய கழிவுப்பொருட்களை எரியூட்டுதல் அல்லது சுகாதாரமான வகையில் தரை நிரப்புகையொன்றை நடத்திச் செல்லுதல்;

(க) கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல், சேகரித்தல், தெரிவுசெய்தல், வகைப்படுத்துதல், போக்குவரத்து செய்தல், மாற்றுதல் மற்றும் அகற்றுதல் போன்ற கருமங்களில் ஈடுபடும் ஒவ்வொரு பணியாளருக்கும் பொருத்தமான ஆடைகள், கையுறைகள், முகமூடிகள், பாதணிகள் என்பவற்றை வழங்குதல்;

(கா) வீடு அல்லது ஏனைய வளவொன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது திருத்தியமைக்கவோ சபைக்கு விண்ணப்பித்திருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மாணம் அல்லது திருத்த வேலையின்போது உற்பத்தியாகும் திண்மக் கழிவுப்பொருட்களை அகற்றும் முறை அல்லது குறித்த வேலை தொடங்கியதும் படிப்படியாக முடிவடையும்போது சக்கைக் கற்கள் மற்றும் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும், அகற்றும் வழிமுறைகள் பற்றிய விபரங்களைப் பரிசீலித்தலும் அனுமதித்தலும்;

(கி) சபையின் வளவுக்கென உள்ளகக் கழிவுப்பொருள் முகாமைக்குரிய திட்டமொன்றைத் தயாரித்தல்;

(கீ) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய தேசிய உபாய வழிகளுக்கும் உரிய சட்டங்களுக்கும் அமையக் குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்துக்குமென விரிவான விளக்கங்கள் கொண்ட இறுதியான அகற்றுதல்கள் சம்பந்தமான எதிர்வரும் 03 ஆண்டுகள் கொண்ட கழிவுப்பொருள் முகாமையைச் செயற்படுத்தும் திட்டமொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும், அந்தத் திட்டத்தை உரிய கால எல்லைக்கு ஏற்றவாறு தொடரொழுங்கின் அடிப்படையில் சபை மூலம் வருடாந்தம் அங்கீகரித்தல்;

(கு) (அ) விலிருந்து (கீ) வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாகத் தலைவருக்குக் கிடைக்கப்பெறும் ஏதும் முறைப்பாடுகள் மீது, ஏற்படவுள்ள தொல்லைகள் பற்றியதாயின் மூன்று நாட்களுக்குள்ளும், ஏனைய முறைப்பாடுகளெனின் பதினான்கு நாட்களுக்குள்ளும் ஆய்வு செய்வதுடன் உடனடியாக நடவடிக்கை எடுப்பது.

### அனுமதிப்பத்திரங்கள்

23. (i) கழிவுப்பொருட்களை மீள்பயன்பாட்டுக்கோ மற்றும் மீள்சுழற்சிக்கோ பயன்படுத்தும்போது அல்லது கூட்டெரு, உயிர்வாயு அல்லது வேறேதும் தயாரிப்புக்கு உட்படுத்தும் ஒருவர் பின்வரும் அம்சங்களை நிறைவு செய்வாரெனின் அவருக்குச் சபை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்க முடியும்:-

(அ) சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளுக்கேற்ப நகராண்மைப் பிரதேசத்திலோ அல்லது ஏனைய உள்ளூராட்சி அமையப் பிரதேசங்களிலோ ஏதும் தொழில் முயற்சியைச் செய்து வருதல்;

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுக்கென சபை அனுமதித்த தரத்துக்கு அமைவாக நிர்மாணிக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிக்கும் நிலையங்களை வழங்குதல்.

(ஈ) சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் மாநகரசபை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாதவாறு சுகாதாரமான முறையில் போக்குவரத்துச் செய்வதற்காக வாகன ஏற்பாடுகளைச் செய்தல்;

(உ) உரிய தொழில் முயற்சியை நகரசபை எல்லைக்குள் நடத்திச் செல்லும்போது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் குறித்த கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கெனக் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் கழிவுப்பொருட்களைத் தயாரிக்கும்போது அல்லது அழுத்தும்போது மிஞ்சும் எச்சங்களையோ அல்லது மறுக்கும்போது தோன்றும் துணை உற்பத்திகளாக மாற்றப்படாத கழிவுப்பொருட்களைச் சபை அனுமதித்தவாறு சபையிடம் கையளிக்க இணக்கம் தெரிவித்தல்;

(ii) அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதைச் சபை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மறுக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வேண்டிக்கொள்வாரெனின், நிராகரிப்புக்கான அல்லது மறுப்பதற்கான காரணங்களை விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்.

(iii) செல்லுபடிக் காலத்துக்குள் சேகரிப்பதற்கெனத் தலைவரால் அனுமதி வழங்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அல்லது வகையைக் குறித்த கழிவுப்பொருளைச் சேகரிக்க அனுமதி வழங்கப்பட்ட பிரதேசம் மற்றும் ஏனைய பொருத்தமான நிபந்தனைகள் என்பவற்றை அனுமதிப்பத்திரத்தில் குறித்துக் காட்டுதல்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாத வேளைகளில் இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

(v) (iv) ஆவது துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல் அல்லது பெறுதல் கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் பொதுமக்களை அறிவூட்டுவதற்காக தலைவர் ஊடகங்கள் வாயிலாகப் போதுமான அளவில் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

**கழிவுப்பொருட்கள் அகற்றப்படும் பிரதேசங்கள்**

24. கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கெனச் சபை ஒதுக்கியுள்ள பிரதேசங்களுக்குள் நுழைவதற்கு அனுமதியில்லாத எவருக்கும் முடியாது. அங்கு நடமாடவும் கூடாது. அப்பிரதேசத்தினுள் ஏதும் பொருட்களையோ அல்லது வீசப்படும் பொருட்களையோ இட்டுவைத்தல், இருக்கும் நிலையை மாற்றியமைத்தல் அல்லது அகற்றுதல் கூடாது. விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய எவரும் சபை அனுமதித்தாலன்றி காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதும் தடைசெய்யப்பட்ட கழிவுப்பொருட்களையும் இட்டுவைத்தல் கூடாது.

25. அங்கீகாரம் வழங்கும் நிபந்தனைகளுக்கமையத் தலைவரது மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினது எழுத்துமூல முன் அனுமதியுடனல்லாது நகரசபையின் எல்லைக்குள் அமைந்தள்ள காணியொன்றை அல்லது வசதியொன்றை, அதற்கு வெளியில் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களை இட்டுவைத்தலுக்கு வழங்குதல் அல்லது பயன்படுத்துதல் கூடாது.

**ஏனையவை**

26. (i) தலைவர் அல்லது எழுத்துமூலம் அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு நியாயமான எந்த நேரத்திலும் ஏதேனும் ஒரு வளவுக்குள் பிரவேசிக்கவும் அதன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுகின்றாரா எனப் பரிசீலிப்பதற்கும் அதிகாரமுண்டு.

(ii) அந்த வளவின் உரிமையாளர், குடியிருப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அங்கு வசிப்பவர் அல்லது அங்கு பணிபுரிபவர் எவரேனும் தலைவருக்கோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கோ தேவையான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் கீழ் தலைவரோ அல்லதுத அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ தமது அதிகாரங்களைப் பயன்டுத்தும்போது எவரும் அதற்குத் தடையாக இருத்தல் கூடாது.

27. சபை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய இந்தத் துணைவிதிகளைச் செயற்படுத்தும் எந்தவொரு அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கும் ஊக்குவிப்பு வழங்கப்பட முடியும்.

28. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவது அல்லது தகர்ப்பது குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் 153 ஆவது பிரிவின் (2) ஆவது உபபிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும். இதன் கீழ் விதிக்கப்படும் எல்லாத் தண்டப் பணமும் நகரசபையின் நிதியில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

**சொற்பத விளக்கம்**

29. இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கெனச் சொற்பத விளக்கம் தேவைப்பாட்டாலன்றி,

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்" என்பது அவற்றை அகற்றும் ஒருவருக்கு அவற்றால் நுகர்வுப் பெறுமானம் இல்லாத மற்றும் கழிவுகள், குப்பைகள், வீதிகளைச் சுத்தம் செய்யும்போது சேரும் கழிவுப்பொருட்கள், தூசு, மணல், சேறு மற்றும் சாம்பர் எனவும்,

''உணவுக் கழிவுப்பொருட்கள்'' என்பது மனித நுகர்வுக்காகப் பயன்படுத்த முடியாத இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை, காய்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப்பொருட்கள் எனவும்,

''தொல்லைதரும் கழிவுப்பொருட்கள்'' என்பது மக்களது சுகாதார நலனுக்கோ சுற்றாடலுக்கோ தீங்கு விளைவிக்கும் நச்சுக்களைக் கொண்ட, தீப்பற்றக்கூடிய, எதிர்விளைவுகளைத் தரக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய, கதிரியக்கத் தன்மைகள் கொண்ட கழிவுப்பொருட்கள் எனவும்,

''சேகரித்தல்'' என்பது அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர் அல்லது நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் மீள்சுழற்சி, அமுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றும் வசதிகளுக்கெனப் போக்குவரத்துச் செய்வதற்காகக் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதையும்,

''கூட்டெரு'' என்பது காபனேற்றுக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களது சமிபாட்டின் பின்னர் மாற்றமடையும் இறுதி விளைவுப்பொருளாகும். இது மண்ணின் தன்மையைப் பாதுகாக்கவல்ல மென்மண்ணையும்,

''தலைவர்'' என்பது .................................. நகரசபையின் தலைவரையும்,

''களஞ்சியப்படுத்துதல்'' என்பது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது வளவுக்குள்ளே அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொது சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் அல்லது இட்டுவைத்தல் என்பதையும்,

''கட்டணம்'' என்பது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதேனும் ஒரு கட்டணத்தையும்,

''வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்'' என்பது வீட்டுத்தோட்டத்துக்குள் காணப்படும் மரங்கள் கன்றுகளிலிருந்து அகற்றப்படும் தாவரப் பகுதிகளையும், கல், மண் போன்றவற்றையும்,

''உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்'' என்பது, நுண்ணுயிர்களால் உக்கலடையச் செய்ய முடியுமான கழிவுப்பொருட்களையும்,

''பொது இடங்கள்'' என்பது பாதை, மைதானம், பொதுக் காணி, பாதைப் பாதுகாப்பிடம், விளையாட்டுத்திடல், பொதுக் கட்டம், மயானம், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, ஏரி, நீர்த்தேக்கம், தடாகம், களப்பு, கிளைநிதி, நீர் செல்லும் வழி, வடிகான், கடல், கடற்கரை அல்லது மக்கள் பொதுவாகப் பயன்படுத்தும் பொதுவான இடத்தையும்,

''மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்'' என்பது கழிவுப்பொருட்களைக் கழிவுப்பொருட்கள் என மீண்டும் அடையாளம் கண்டுகொள்ள முடியாத வண்ணம் அதன் தோற்றத்தை மாற்றுவதன் மூலம் புதிய நுகர்வுப் பண்டமொன்றை உற்பத்தி செய்யக்கூடிய கழிவுப்பொருட்களையும்,

''மீள்பாவனைக் கழிவுப்பொருட்கள்'' என்பது கழுவப்படுவதாலோ அல்லது கிருமியழித்தலினாலோ அல்லது வேறு முறைகளினாலோ சுத்தப்படுத்திய பின்னர் பயன்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களையும்,

''போக்குவரத்துச் செய்தல்'' என்பது மனித, மிருக அல்லது இயந்திர சக்தியின் மூலம் இயக்கப்படும் ஏதேனும் போக்குவரத்து ஊடகமொன்றைப் பயன்படுத்தி கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நிலையத்திலிருந்து அவற்றைத் தயாரித்தல், அமுத்துதல் அல்லது அகற்றுதல் செய்வதற்காக உள்ள இடம் வரை கொண்டு செல்வதையும்,

''தொட்டி, பாத்திரம் அல்லது கொள்கலன்'' என்பது துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கேற்றவாறு கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல், சேகரித்தல் அல்லது போக்குவரத்துச் செய்தல் என்பவற்றுக்கெனப் பயன்படுத்தும் தொட்டி, பாத்திரம், உறை, பை அல்லது ஏனைய கொள்கலன்களையும்,

''அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர்'' என்பது கழிவுப்பொருட்களைச் சேகரிக்க அல்லது பெற்றுக்கொள்ள தலைவரது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள ஒருவரையும்,

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது இந்தத் துணைவிதிகளின் கீழ்வரும் கருமங்களை மேற்கொள்வதற்காக அல்லது செய்வதற்காக தலைவர் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவரையும்,

''கொண்டு செல்லல்'' என்பது மீள்பாவனை செய்யப்படாத, மீள் சுழற்சி செய்யப்படாத, தயாரிக்கப்படாத, அழுத்தம் செய்யப்படாத எல்லா வகையான கழிவுப்பொருட்களையும் நிரந்தரமாக இட்டுச் செல்லக்கூடிய காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது நிலத்தின் கீழ் இட்டு வைத்தல் என்தையும்,

''மாற்றம் செய்யும் இடம்'' என்பது இந்தக் கருமத்துக்கென சபை விதிக்கும் இடம் எனக் கொள்ளப்படுவதுடன், அந்த இடத்திலிருந்து மீள்சுழற்சி செய்தல், தயாரித்தல் அழுத்துதல் அல்லது கொண்டு செல்லல் என்பவற்றுக்கென வசதியாக அமையும் வண்ணம் போக்குவரத்துச் செய்வதில் செயற்றிறமையை அதிகரிக்கும் நோக்குடன் கழிவுப்பொருட்களை மிகச் சிறிய வாகனங்களைவிட மிகப் பெரிய வாகனங்களிலிருந்து அதிபெரிய வாகனங்களுக்கு மாற்றுதல் செய்வதனையும்,

''ஆள்'' என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அமையம் ஒன்றையும், அல்லது ஆட்களது சங்கத்தையும் அல்லது மன்றத்தையும்,

''நகராண்மை கழிவுப்பொருள் சேகரிப்பாளர்'' என்பது தொட்டிகள், கொள்கலன்களில் இருந்து கழிவுப்பொருட்களைக் கூட்டியெடுத்தல், சேர்த்தல், பெற்றுக்கொள்ளுதல் அல்லது அகற்றுதல் என்பவற்றுக்கென சபை ஈடுபடுத்தும் பணியாளரையும் அல்லது அந்தக் கருமத்தை நிறைவேற்றுவதற்காகச் சபையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ள நபரையும்,

''வேறாக்குதல்'' என்பது இந்தத் துணைவிதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வகைகளுக்கேற்றவாறு கழிவுப்பொருட்களைப் பல்வேறு வகைகளாகத் தெரிந்து வேறாக்குவதையும்,

''தயாரித்தல்'' என்பது கழிவுப்பொருட்களைப் பயனுள்ள பொருளாக மாற்றியமைக்கும் செயன்முறையையும்,

''சபை''என்பது ............................................. நகரசபையையும்,

''நகராண்மைப் பிரதேசம்'' என்பது மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) கீழ் வெளிப்படுத்தப்படும் பிரதேசங்களையும்,

''சுகாதாரமான தரை நிரப்புதல்'' என்பது அதனுடன் தொடர்பான சமூக, சுகாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்களைக் குறைத்துக்கொள்வதற்காக இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களுக்கமைய கழிவுப்பொருட்கள் நிலத்தில் இறுதியாக இடப்படுவதையும்,

''உரிமையளர் அல்லது குடியிருப்பாளர்'' என்பது வளவின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அட்டோர்ணி அதிகாரத்தைக் கொண்டிருப்பவர் அல்லது உரிமையளரால் தமது கைத்தொழிலை, தொழிற்சாலையை தோட்ட முகாமைக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதியை, அல்லது பொறுப்பாளரை அல்லது வாடகைக்குப் பெற்றிருப்பவரை அல்லது ஒருவரது கட்டளையின் கீழ் செயற்படும் முகாமையாளரையும் குறிப்பிடும்.

*07-389/2*

**.................................................. பிரதேச சபை**

*திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்*

*1989ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பின்வரும் வரைவுச் சட்டத் துணைவிதிகள் மேற்குறித்த பிரிவுகளின் கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 93 வது பிரிவு மற்றும் 126 ஆவது பிரிவின் 9 ஆவது உப பிரிவின் (ஆ), (இ) பந்திகளுக்கமைய திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகளை விதிக்க பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்களது (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் தழுவப்பட மத்திய மாகாணத்தின்பிரதேச சபைகளுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும்,*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*2012.05.24.*

**திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய துணை விதிகள்**

1. இந்தத் துணைவிதிகள் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் பொது இடத்திலும் தனிப்பட்ட சுற்றாடலிலும் வீதியிலும் பாதைகளிலும் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப்பொருட்களை வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், போக்குவரத்துச் செய்தல், மாற்றும் நிலையங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நடத்திச் செல்லுதல், தயாரித்தல், அமுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான முன்னோடி மேற்பார்வை செய்தல், பரிசீலனை செய்தல், கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்காக இத்துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது வளவைக் கழிவுப்பொருட்கள் இல்லாத சுகாதாரமான மனங்கவரும் நிலையில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

4. பிரதேச சபைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள ஏதேனும் வளவொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது சுற்றாடலுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல், வேறாக்குதல், களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து செய்தல் மற்றும் வெளியேற்றச் செய்தல் வேண்டும். இன்றேல் இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அவற்றை செய்வித்தல் வேண்டும்.

5. (i) வளவினுள் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் அவரது/அவளது சுற்றாடலில் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல் அல்லது வேறேதும் முறைகளைப் பயன்படுத்தி நாளாந்தம் அல்லது அதற்குக் குறைவான கால நேரத்துக்குள் சேகரித்தல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இந்தத் துணைவிதிகளின் முன்னேற்பாடான உபவிதிகளுக்கமைய சேகரிக்கும் கழிவுப் பொருட்களை 8 முதல் 20 வரை காட்டப்பட்டுள்ள துணை விதிகளுக்கமைய வேறுபடுத்துதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்வதற்கு உட்படுத்துதல் வேண்டும்.

(iii) உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் தமது கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்தவோ அல்லது அவற்றை விடுவிப்பதற்கோ பயன்படுத்தும் பை அல்லது உறை அல்லது பெரிய பாத்திரம் அல்லது ஏதேனும் கொள்கலனை 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளது ஏற்பாடுகளுக்கமையச் சேகரிப்பதற்காக நல்ல முறையில் பேணிவருதல் வேண்டும். அவை கிழிந்தோ, ஓட்டையாகியோ உடைந்தோ அல்லது தொடர்ந்து ஈரலிப்பாகி நொய்ந்து விடுவதனாலோ அல்லதுத வேறெந்தக் காரணங்களாலோ நியாயமாக அவற்றைக் கையாள முடியாது உடைந்துபோகும் நிலையில் இருந்தால் அவற்றை இந்தக் கருமங்களுக்காகப் பயன்படுத்துதல் கூடாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வேண்டிக்கொள்வாராயின் சபை மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய ஒரு பகுதியை மானியமாகவோ அல்லது முழுவதையும் மானியமாகவோ இவ்வாறான கொள்கலன்களைச் சபை வழங்க முடியும்.

(iv) (i) உபவிதியின் ஏற்பாடுகளின் கீழ் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்துப் பகிரங்கப்படுத்தும் சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் முறைக்கும் நேரசூசிக்கும் அமைய உரிமையாளர்களோ அல்லது குடியிருப்பாளர்களோ அகற்றச் செய்தல் வேண்டும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், வீட்டிலுள்ளோர், விருந்தினர் அல்லது அண்டைவீட்டாரது சுகாதாரத்துக்கோ, அப்பிரதேசத்தின் சுகநல வசதிகளுக்கோ ஊறு விளைவிக்கும் வண்ணம் அபாயகரமான வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதோ களஞ்சியப்படுத்துவதோ அல்லது அகற்றுவதோ கூடாது.

6. (i) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை வீதியிலோ, பாதையிலோ, வழிகளிலோ, ஒழுங்கைகளிலோ, தெருவிலோ அல்லது ஏனைய பொது இடங்களிலோ அல்லது சுற்றாடலிலோ, வடிகானிலோ அல்லது நீரோடையிலோ, நீர்த்தேக்கத்திலோ அல்லது கடலிலோ விடுவித்துச் செல்லுதல் கூடாது.

(ii) பிரதேச சபையின் பிரதேசத்துக்குள் திறந்த வெளியில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுப்பொருட்களை எவரும் எரித்தல் கூடாது.

(iii) ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய ஏதும் கழிவுப்பொட்களை விடுவித்தல், அழுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றுவதற்காக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில், அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறினால் அவர் அந்தக் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கென அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iv) 7 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமையத் தயாரித்தல், அழுத்துதல் அல்லது அகற்றுதல் செய்யப்படாத ஏதும் கழிவுப்பொருட்கள் மேற்குறித்த (iii) ஆவது ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பாளரால் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுடன் 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பின்வரும் அம்சங்கள் தவிர்ந்த ஏனைய வழிகளில் கழிவுப்பொருட்களைத் தமது வளவுக்குள்ளேயே அகற்றிவிட முடியும்:-

(அ) அவ்வாறான கழிவுப்பொருட்களை அகற்றுவதைச் சபை தடை செய்துள்ள பிரதேசங்கள்;
(ஆ) சபை நிர்ணயித்துள்ள சில கழிவுப்பொருள் வகைகள்.

(ii) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்குத் தலைவர் அங்கீகரித்த திட்டத்துக்கும் பிரமாணங் களுக்கும் அமையத் தயாரிக்கப்பட்ட சூளையில் அல்லது எரியூட்டியில் கழிவுப்பொருட்களை எரித்துவிட முடியும். இன்றேல், தலைவரால் அனுமதிக்கப்பட்ட முறைக்கேற்ப கழிவுப்பொருட்களை அழுத்தம் செய்வதற்கும் தயாரிப்பதற்கும் புதைப்பதற்கும் முடியும்.

(iii) ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 'கூட்டெருக் கொள்கலன்' ஒன்றைப் பெறுவதற்கெனத் தலைவரிடம் வேண்டிக்கொண்டால் அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உரிய கூட்டெருக் கொள்கலனைப் பராமரிப்பதற்கான போதிய இடவசதியைக் கொண்டிருந்தால் அதனை உரிய வளவுக்குள் வைத்திருக்கத் தலைவர் அனுமதி வழங்குவார்.

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வளவினுள் சேரும் "வீட்டுத்தோட்டக் கழிவுகளை" இயன்ற அளவில் தலைவர் அனுமதித்த விதத்தில் தயாரிக்கவோ அழுததத் செய்யவோ முடியும். அந்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எஞ்சியிருக்கும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்களை அவற்றின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்தி பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடமோ கையளித்தல் வேண்டும்.

(v) வீதியை அல்லது வழியை அடுத்துள்ள மரத்தையோ அல்லது அதன் கிளையையோ வெட்டும் ஒருவர் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துதல் வேண்டும். இன்றேல் அகற்றிடச் செய்தல் வேண்டும். அதுவுமின்றேல் சபை தீர்மானிக்கும் கொடுப்பனவொன்றைச் செய்து பிரதேச சபையின் பொறுப்பாளரிடம் அவற்றைக் கையளித்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொருவரும் தமது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் ஏதேனும் விலங்குகள் வீதியில், வழியில் அல்லது பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு மலம் கழித்துவிட்டால் 8 முதல் 20 வரையுள்ள துணைவிதிகளுக்கமைய அதனைத் துப்புரவு செய்து அகற்றிவிடுவது உரியவரது பொறுப்பாகும்.

(vii) பிரதேச சபைப் பிரதேசத்துக்குள் எவரும் எவ்வகையான கழிவுப்பொருட்களையும் வாகனத்திலிருந்து வீதியிலோ வழியிலோ அல்லது பொது இடங்களிலோ இட்டுச் செல்லுதல் அல்லது வைத்துவிட்டுச் செல்லுதல் கூடாது.

(viii) வீடொன்றை அல்லது வளவொன்றை நிர்மாணிக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது வளவுக்குள் உற்பத்தியாகும் திண்மக்கழிவுப்பொருட்களையும் வெளியிடும் கழிவுப்பொருட்களையும் அழுத்தும் கழிவுப்பொருட்களையும் தயாரித்துக்கொள்ளும் முறைகள் பற்றிய விளக்கங்களைத் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**வீட்டு வளவுகள்**

8. (i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் கூட்டிப் பெருக்கும் அல்லது வேறேதும் முறையினால் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் (வகைப்படுத்தி) வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள், அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இவ்வாறு வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வெவ்வேறாக உறைகளில் இட்டு, அவை அகற்றப்படும்வரை தமது வளவுக்குள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்தல் வேண்டும். உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் ஈரக்கசிவு ஏற்படாத பொருட்களால் செய்யப்பட்டதும் எலி, கிருமிகள் ஏனைய விலங்குகள் உட்செல்லாத வண்ணம் உரிய வகையில் மூடப்பட்ட கொள்கலன்களில் இட்டுவைத்தல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல்கள், உடற்பாகங்கள் அல்லது அசுத்தங்கள் போன்ற கழிவுப்பொருட்கள் அகற்றப்படவேண்டிய தன்மைக்கேற்ப பிரதேசத்துக்கு அமைவான வகையில் அவை காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கும் கட்டணத்தை சபையிடம் செலுத்துவதன் பேரில் பிரதேச சபைக் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பந்தி (i) இன் (அ), (ஆ), ஆகியவற்றில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறுவாரெனில், அவர் (இ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் உரிய கழிவுப்பொருட்களை பிரதேச சபை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். இன்றேல், ஒவ்வொரு கழிவுப்பொருளுக்குமெனச் சபை நிர்மாணித்துள்ள தாங்கிகளிலோ அல்லது உறைகளிலோ இட்டுவைத்தல் வேண்டும்.

9. (i) வாடகைக் குடியிருப்பாளர்களை அதிக அளவில் கொண்டுள்ள பல மாடிக் கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) விலங்குகளது இறந்த உடல், உடலுறுப்புக்கள், அசுத்தங்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள், தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கமையவும் தரத்துக்கு அமையவும் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ செய்துகொள்ளல் வேண்டும். அவற்றைச் சுத்தமான முறையிலும் சுகாதாரமான வகையிலும் பராமரித்தல் வேண்டும்.

(iii) (i) ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் (ii) ஆவது பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய நடந்துகொள்ளத் தவறும் பட்சத்தில் தலைவர் அறிவிக்கும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை வழங்கும்படி உரிமையாளரை அல்லது குடியிருப்பாளரைக் கேட்டுக்கொள்ளச் செயலாளருக்கு அதிகாரமுண்டு. தலைவரது நியமங்களுக்கமையச் செயற்படுவது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது கடமையாகும்.

(iv) கட்டடமொன்றின் கீழ்த்தளத்தின் அல்லது மேற்றளத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அவற்றுக்கென வைக்கப்பட்டுள்ள உரிய கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபந்தியின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அகற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவரால் முடியும். அவ்வாறு அகற்றப்படாத பட்சத்தில் (இ), (ஈ), பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

10. (i) பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்று சேரிகளில் வாழும் மக்களது பயன்பாட்டுக்கென தலைவர் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ கொள்கலன்களையோ இலவசமாக வழங்குவது சட்டபூர்வமானதாக அமையும்.

(ii) ஒவ்வொரு சேரி வீட்டினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களும் அவர்களது வாழிடத்தில் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் வகைப்படுத்தி, வேறாக்கி, அவர்களது வாழிடத்துக்கு மிக அண்மையில் வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இடுதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்.

(iii) இந்தத் துணைவிதியின் (ii) ஆவது உப பிரிவில் (அ), (ஆ) தலைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக கழிவுப்பொருள் சேகரிப்பாளருக்கு அனுமதி வழங்க தலைவருக்கு அதிகாரமுண்டு.

**வர்த்தக நிலையங்களும் அலுவலகங்களும்**

11. (i) வர்த்தக நிலைமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களும் ஒவ்வொரு தொகுதியிலும் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் ஒழுங்கில் வகைப்படுத்தி வேறாக்கல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பயன்பாட்டு மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) சுற்றாடலைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) வகைப்படுத்தி வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும்வரை வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்பட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) வர்த்தக நிலையமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iv) மேல் தளத்தில் மற்றும் கீழ்த்தளத்தில் சில வியாபார நிலையங்களையோ அல்லது அலுவலகங்களையோ கொண்டுள்ள தொகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்கள் தலைவரால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக உரிய வர்த்தக நிலையங்கள் அல்லது அலுவலகங்களிலிருந்து வகைப்படுத்தி வேறாக்கும் கழிவுப்பொருட்களைச் சேகரிக்க அல்லது வைத்திருக்க ஒவ்வொரு வர்த்தக நிலையத்துக்கும் அல்லது அலுவலகத்துக்கும் தேவையான கழிவுப்பொருள் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை ஏற்பாடு செய்துகொடுத்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (iv) உபவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் வகைப்படுத்தி வேறாக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களைத் தனித்தனியான பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் இட்டு வைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்போரிடம் கையளிக்க ஒவ்வொரு உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்கும் உரிமையுண்டு.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் அகற்றப்படாத, இந்தத் துணைவிதியின் (i) ஆவது பிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகள் மற்றும் (ii) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகள் மூலம் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளையும் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் தலைவரிடம் செலுத்துவதன் பேரில் அவற்றை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vii) அயலவர்களுக்கும் குறித்த வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் பணியாளர்களுக்கு சுகாதார அல்லது சுகநலக்கேடு ஏற்படாதவாறு கழிவுப்பொருட்களை அகற்றும் இந்தத் துணைவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்கள் என்பவற்றைப் பராமரித்து வருவது உரிய வர்த்தக நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளர்களது பொறுப்பாகும்.

(viii) இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கான சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இவற்றின் பொருள்–

"அலுவலகம்" என்பது 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றில் பணியாற்றுவோர் பற்றிய சட்டத்தின் (129 ஆவது அதிகாரத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தமே தரும்.

"குடியிருப்பாளர்" என்பது வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது வர்த்தகத்தின் அல்லது அலுவலகத்தின் பொறுப்பாளராவார்.

"வர்த்தக நிலையம்" என்பது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துக்காகப் பண்டங்களை வைத்திருக்கும் நிலையமாகும். மேலும் உணவுவகைகள், பான வகைகள் என்பவற்றை வைத்திருக்கும் நிலையமும் சிகை அலங்கார நிலையம் அழகுக்கலை நிலையம் நடத்திச் செல்லப்படும் இடம் எனவும் கொள்ளப்படும்.

**சிற்றுண்டிச்சாலைகள்**

12. (i) ஒரு சிற்றண்டிச்சாலைக்காரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபரொருவர் தமது வளவுக்குள் சேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிவுசெய்து வேறாக்குதல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூலு அதிகாரம் வழங்கப்பட்டவரும் தெரிவுசெய்து வகைப்படுத்தி வேறாக்கிய கழிவுப்பொருட்களை அகற்றும்வரை வெவ்வேறாகப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலைக்காரரும் அல்லது அவரால் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டவரும் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது வேறேதும் பிராணிகள் உட்செல்வதைத் தடுக்கும் வகையில் எல்லா உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களையும் பிளாத்திக் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட மூடிகளைக் கொண்டு பாதுகாப்பாகச் சரியாக மூடிய பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வைத்திருத்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(v) இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் படி கையளிக்கப்படாத அவ்வாறான ஏதும் கழிவுப்பொருட்கள் மற்றும் (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள், அவற்றின் தன்மையைக் கருத்திற்கொண்டு சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(vi) (அ) இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி அவற்றின் பொருள் இவையாகும் –

"சிற்றுண்டிச்சாலை" என்பது உறங்கும் வசதிகள் உள்ள அல்லது இல்லாத, பணம் செலுத்தி நுகர்வுக்காக உணவுவகைகள் பான வகைகள், மதுவகைகள் என்பவற்றை வழங்கும் நிலையம் எனப்படும். இதற்கு உணவு விடுதி, விருந்தினர் விடுதி, தங்குமிடம், வாடிவீடு, யாத்திரிகர் தங்குமிடம், சோற்றுக்கடை அல்லது சிற்றுண்டிச்சாலைக்குச் சமமான வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஒரு வளவையும் குறிப்பிடும் பொருள் கொள்ளப்படும்.

**காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

13. (i) காய்கறிகள் விற்பனை நிலையம், பழவகை விற்பனை நிலையம் ஒவ்வொன்றினதும் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருக்கும் நபர் தமது வளவுக்குள் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற காய்கறிகள், பழவகைகள் மற்றும் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் (அ) வரியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை ஈரக்கசிவு ஏற்படாத வகையில் பிளாத்திக் அல்லது உலோகத்தினாலான தனியான கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அதனுள்ளே ஈக்கள், எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் புகாத வண்ணம் உரிய வகையில் பாதுகாப்பாக மூடி வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்களைப் பொருத்தமான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவில் (அ), (ஆ), (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களை இந்தத் துணைவிதியின் (1) ஆவது உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கலாம்.

(iv) இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, காய்கறிகள், பழவகைகள் விற்பனை நிலையம் என்பது காய்கறிவகைகளை அல்லது பழவகைகளைக் களஞ்சியப்படுத்தி அல்லது விற்பனைக்கு வைத்திருக்கும் நிலையம் எனப் பொருள்படும்.

**இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கூடங்கள்**

14. (i) குறித்த கருமங்களுக்கென செயலாளர் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எவரேனும் ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதி பெறப்பட்ட விலங்குகள் பறவைகள் தவிர ஏனைய எந்த விலங்கையோ அல்லது பறவையையோ கொல்லுதல் கூடாது.

(ii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் கொல்லப்பட முடியுமான விலங்கின் அல்லது பறவையின் வகை, கொல்லப்படும் முறை, சுத்தப்படுத்தும் முறை. மனித நுகர்வுக்குப் பயன்படாத இரத்தம், குடற்பாகங்கள் மற்றும் ஏனைய பகுதிகளை அகற்றுவதற்குரிய நிபந்தனை மற்றும் சபை பொருத்தமானது எனக் கருதும் ஏனைய நிபந்தனைகளும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபபிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கவெனச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணம் ஒன்றைச் சபை அறவிடும். அந்தக் கட்டணத்தை அனுமதிப்பத்திரம் வழங்கும்போது செலுத்துதல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழியிறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடத்தின் உரிமையாளர் அல்லது அந்த வர்த்தகத்தை நடத்திச் செல்பவர்கள் அவர்களது கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் தெரிந்து வேறாக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற விலங்குகளின் இறந்த உடல் அல்லது இறந்த உடலின் பகுதிகள் அல்லது முட்டைகள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(v) தெரிவுசெய்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்களைத் தனியான பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் (iv) ஆவது உபபிரிவின் (அ) ஆவது வரியின் கீழ் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை ஈரக்கசிவு ஏற்படாத கொள்கலனுக்குள் இட்டு, அதற்குள் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் நுழையாத வகையில் சரியான முறையில் பாதுகாப்பாக மூடிவைத்தல் வேண்டும்.

(vi) இந்தத் துணைவிதியின் (IV) ஆவது உபபிரிவின் (அ), (ஆ), (இ) ஆவது வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களை இந்தத் துணைவிதியின் (iv) உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் துர்நாற்றம் பரவிச் செல்ல முன்னர் பிரதேச சபை கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(vii) இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கென சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, ''இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கூடம்'' என்பது இந்தப் பண்டங்களை விற்பனை செய்வதற்கெனக் களஞ்சியப்படுத்தி வைக்குமிடம் அல்லது விற்பனைக்காக வைத்திருக்குமிடம் எனப்பொருள்படும்.

**நடைபாதை வியாபாரம்**

15. (i) கழிவுப்பொருட்களைத் தோற்றுவிக்கும் வியாபாரமொன்றைச் செய்துவரும் நடைபாதை வியாபாரி ஒருவர் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு அமைய அந்தக் கழிவுப் பொருட்களை இட்டுவைப்பதற்காகப் பாத்திரமொன்றையோ, கொள்கலனொன்றையோ வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான கழிவுப்பொருட்கள் எவற்றையும் நடைபாதையிலும், வீதியிலும் அல்லது பொது இடங்களிலும் இட்டுவைத்தல் கூடாது.

(ii) நடைபாதை வியாபாரியொருவர் வாகனங்களினதும் பாதசாரிகளும் போக்குவரத்துக்குத் தடையேற்படும் வகையில் பாத்திரங்களையும் ஏனைய கொள்கலன்களையும் வைத்திருத்தல் கூடாது.

(iii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் மூலம் உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வகையில் வேறாக்கி வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள், உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்.

(iv) வேறாக்கி வகைப்படுத்திய கழிவுப்பொருட்களைப் பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் வேறாக இட்டுவைத்தல் வேண்டும். இந்தத் துணை விதிகளின் (ii) ஆவது உப பிரிவின் (அ) பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது விலங்குகளால் தின்றழிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பாதுகாப்பான கொள்கலன் ஒன்றுக்குள் இட்டு வைத்திருத்தல் வேண்டும். அத்துடன், மேலதிக கழிவுப் பொருட்களைப் போடுவதற்கல்லாது ஏனைய நேரங்களில் அதனை மூடியே வைத்திருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இந்தத் துணை விதிகளின் (iii) ஆவது உப பிரிவின் (அ), (ஆ) பிரிவுகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் அல்லது இந்தத் துணை விதியின் (iii) ஆவது உப பிரிவின் (இ) பந்தியில் விசேடமாகக் குறிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் நாளாந்தம் கையளித்தல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருள் பாத்திரங்களையோ அல்லது கொள்கலன்களையோ நடைபாதையில், வீதியில் அல்லது பெருந்தெருவில் வைத்தல் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கொள்கலன்களை பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முன்னர் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(vii) இந்தத் துணை விதிகளின் கருமங்களுக்கெனச் சொற்பத விளக்கத் தேவைப்பட்டாலன்றி, ''நடைபாதை வியாபாரி'' என்பது நடைபாதை அல்லது பாதையோரத்தில் பொருட்களை விற்பவர் அல்லது சேவைகளை வழங்குபவரைக் குறிக்கும்.

**தொழிற்சாலைகள்**

16. (i) தொழிற்சாலைகளது ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் தொழிற்சாலை வளவுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களை ஒன்றுசேர்த்துப் பின்வரும் முறைக்கேற்ப வகைப்படுத்தி வேறாக்குதல் வேண்டும்:-

(அ) உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சிக் கழிவுப்பொருட்கள்;

(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;

(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்தத் துணைவிதிகளின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும். அவ்வாறு கையளிக்க முடியாமற்போன கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையிடம் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்க முடியும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த தொழில் முயற்சிக்கென வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகத் தொல்லை தரும் கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி "தொழிற்சாலை" என்பது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழில்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்.

**அகழ்தல், நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல்**

17. (i) வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை அகழ்தல் ஏதேனும் நிர்மாணமொன்றைக் கட்டியெழுப்புதல் அல்லது தகர்த்தலின்போது உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைப் பொருத்தமான முறையில் குறித்த வளவிலிருந்து அகற்றும்வரை வளவுக்குள்ளே தலைவர் அனுமதித்த இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(ii) இந்தத் துணைவிதிகளின் (i) ஆவது உபபிரில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iii) சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் கருமங்களுக்கென "அகழ்தல், நிர்மாணித்தல் மற்றும் தகர்த்தல் என்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எவரும்" என்பது தொழில் தருனரால் இந்தச் சேவைக்கென ஈடுபடுத்தப்படும் ஆட்களைக் குறிப்பிடும்.

"கழிவுப்பொருட்கள்" என்பது நிர்மாணித்தலின்போது கட்டடப்பொருட்களின் பயன்பாட்டின் பின் பெறப்படும் மண், சேறு, தூசு மற்றும் கழிவுப்பொருட்களையும் கட்டடங்களைத் தகர்க்கும்போது பெறப்படும் கழிவுப்பொருட்களையும் குறிப்பிடும்.

18. (i) எரிவாயு, மின்சாரம், தண்ணீர், தொலைபேசி ஆகிய வசதிகள் அல்லது ஏனைய பொது வசதிகளை வழங்கும்போது யாதேனும் வீதியொன்றை, பாதையொன்றை அல்லது பொது இடமொன்றை ஒருவர் அகழ்வதற்குத் தலைவரிடம் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

(ii) மேற்குறித்த (i) ஆவது விதியின் கீழ் அனுமதி வழங்கப்பட முன்னர் கழிவுப்பொருட்களை அகற்ற மேற்கொள்ளப்படவுள்ள திட்டம், உத்தேச கருமம் நிறைவுற்ற பின்னர் பாதையில் அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைக்கவேண்டி ஏற்படும் கழிவுப்பொருட்களை விண்ணப்பதாரி அகற்றிவிடப் பின்னிற்பாரெனின், அவற்றை அகற்றிவிட ஏற்படும் செலவுகள் பற்றியும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் விண்ணப்பதாரி உத்தேசமாகக் கணிக்கப்பட்ட செலவுக்குச் சமமான ஒரு தொகையை வைப்புத் தொகையாக வைத்தல் வேண்டும்.

(iii) எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களை முழுமையாகவோ அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ அகற்றாது விடுவாரெனின் அல்லது அகற்றுவதில் அசட்டையாக இருந்துவிடுவாரெனின், தலைவர் தீர்மானிக்கும் முறையில் குறித்த கழிவுப்பொருட்கள் அகற்றப்படுவதுடன், அதற்கெனச் செலவாகும் தொகை (ii) ஆவது உபபிரிவின்படி வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.

**மருத்துவ மனைகள்**

19. (i) மருத்துவ மனையொன்றின் உரிமையாளர் வளவுக்குள் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் வழிகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருட்களும் ஏனைய உயிரியற் சமிபாட்டுக் கழிவுப்பொருட்களும் ;
(ஆ) மீள்பாவனைக் கழிவுப்பொருட்களும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்களும்;
(இ) இந்த உபவிதியின் (ஈ) வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகை தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;
(ஈ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(உ) வளவைக் கூட்டிப் பெருக்குவதன்மூலம் சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது உபபிரிவின் கீழ் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு, அவை அகற்றப்படும்வரை பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i) ஆவது உபபிரிவின் கீழ் (இ), (ஈ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அவற்றுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இட்டுவைத்தல் வேண்டும். அத்துடன் அவற்றுக்கென வேறாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறித்த மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய குறித்த கழிவுப்பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

(iii) (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ அல்லது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடமோ கையளிக்க முடியும்.

(iv) இந்தத் துணைவிதியின் சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி, "மருத்துவமனை" என்பது நோயொன்றினால் அல்லது இயலாமையினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது விலங்குகளைக் கையேற்று அவற்றுக்குப் பரிகாரம் செய்வது மற்றும் பரிகாரம் செய்வதற்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்கெனப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த உத்தேசித்துள்ள ஏதும் வளவு (எவ்வகையில் விளக்கம் சொல்லப்பட்டாலும்) எனப்படுவதுடன், நோய் பரிகார விடுதி, கிளினிக், மருத்துவ நிலையம், மகப்பேறு மனை மற்றும் மிருக வைத்திய நிலையம் விலங்கு மருத்துவ மனை என்பனவும் இதிலடங்கும். "தொல்லைதரும் பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்" என்பது உறுப்புக்களின் பகுதிகள், குருதிக்கட்டிகள், நோய் பரவுவதற்கு இடமுள்ள மற்றும் கடுமையாகப் பரவக்கூடிய கழிவுப்பொருட்களும் மருந்து ஊசிகளும் அடங்கும்.

**ஏனைய வளவுகள்**

20. (i) 8 முதல் 19 வரையிலான துணை விதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிராத வர்த்தக முயற்சியை மேற்கொள்ளும் எவரேனும் ஒருவர் பொதுமக்களது பங்களிப்புடன் பொது, சமய, சமூக, கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் அல்லது செயற்படுத்தும் ஒருவர் குறித்த செயற்பாட்டின் மூலம் அல்லது அவற்றுக்கான அமைமொன்றை நடத்திச் செல்லும்போது உண்டாகும் கழிவுப்பொருட்களைப் பின்வரும் முறைகளில் தெரிந்து வகைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருள் மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்;
(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்களும்;
(இ) தொல்லை தரும் கழிவுப்பொருட்கள்;
(ஈ) வளவைக் கூட்டிப் பெருக்கும்போது சேரும் தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆவது உபபிரிவில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாடொன்றை ஏற்பாடு செய்யும் ஒருவர் அந்தச் செயற்பாட்டின் காரணமாக உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கென விசேட வேலைத்திட்டத்தைக் கையளிப்பதற்கு இயலுமான வகையில் நேரகாலத்தோடு சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(iii) தெரிந்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் அகற்றப்படும்வரை தனியான கொள்கலன்களில் இட்டுப் பொருத்தமான இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உபவிதியின் (அ), (ஆ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் அல்லது (i) ஆவது உபபிரிவின் (இ) வரிகளில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

**வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

21. (i) தலைவர் சபையில் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பின்வரும் கருமங்களைத் திட்டமிடவும், கட்டுப்படுத்தவும், நிர்வகிக்கவும் வழிவகைகள் செய்தல் வேண்டும்:-

(அ) பிரதேச சபையின் அதிகார பிரதேசத்துக்குள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வழித்தடங்கள், பொது வடிகான்கள், நீர் வடிந்தோடும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகளைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் பேணிவருதல்;

(ஆ) வீதிகள், பாதைகளின் இருமருங்கிலம் மற்றும் பொது இடங்களிலும் தேவையான எண்ணிக்கையில் தொட்டிகளை வழங்கிப் பொருத்துவதும் அவற்றைப் பராமரிப்பதும்;

(இ) விழாக்காலங்களில், விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்களில் அல்லது சபை தீர்மானிக்கும் காலங்களில் குறித்த விழாக்களையோ அல்லது விசேட நிகழ்ச்சிகளையோ ஏற்பாடு செய்வோரது வேண்டுகோளின் பேரில் பொது இடங்களில் பயன்படுத்துவதற்கென நடமாடும் தொட்டிகளை வழங்குவது;

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்களைச் சுகாதாரமான முறையில் பேணிவருதலும் அவற்றின் அருகில் குடியிருப்போருக்கு அவை தொல்லையாக மாறுவதற்கு முன்னர் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் இடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுதலும்;

(உ) ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள பந்திகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்த்து அதற்கென துரிதமாகச் செயற்படுவது;

(ii) பிரதேச சபை மூலம் விசேடமாக அழுக்குகள், கழிவுகளுக்கென வழங்கப்படும் தொட்டிகளில் ஈரலிப்பான, வர்த்தக, நிறுவக, கைத்தொழில் சார்ந்த அல்லது ஏனைய கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல் கூடாது.

**பிரதேச சபையின் கடமைகள்**

22. (i) தலைவர் பிரதேச சபையில் கலந்துரையாடிச் சபையின் அங்கீகாரத்துடன் பின்வரும் கருமங்களைத் திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் வேண்டும்:-

(அ) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி என்பவற்றில் பொதுமக்களை ஊக்குவித்தல்;

(ஆ) கழிவுப்பொருட்களைத் தெரிந்து வகைப்படுத்துதல் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக அறிவூட்டம் செய்யும் திட்டங்களைச் செய்தல் அல்லது ஊடகங்கள் வாயிலாகப் பிரசித்தப்படுத்துதல்;

(இ) மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கும் சிறிய தொழில்முயற்சி யாளர்களுக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

(ஈ) கழிவுப்பொருட்களைக் குறைப்பது, மீள்பயன்படுத்துவது மற்றும் மீள்சுழற்சி செயன்முறைகளில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பது;

(உ) கழிவுப்பொருட்களை விடுவிக்கும் முறைகள் பற்றிய வேறு மாதிரிகளை முன்னோடியாகக் கொள்ளுதல்;

(ஊ) பிரதேச சபையின் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு கழிவுப்பொருள் வகைக்குமென சபை தீர்மானிக்கும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள் மற்றும் கட்டணங்கள் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டுக் காட்டும் கருமக் குறிப்பொன்றைத் தயாரிப்பதுடன் விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்கள் சேகரிப்பது தொடர்பான நிபந்தனைகள் என்பவற்றையும் அத்துடன் சேர்ப்பது;

(எ) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத கழிவுப்பொருட்களையும் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களையும் கருமக் குறிப்புக்கு ஏற்ப உரிய நேரத்தில் சேகரித்தல்;

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத அபாயகரமான கழிவுப்பொருட்கள் மற்றும் வேறேதும் கழிவுப்பொருட்களையும் சுகாதாரமான முறையில் கொண்டு செல்லுதல்;

(ஐ) அபாயகரமான கழிவுப்பொருட்கள் அல்லது தலைவர் பிரகடனப்படுத்திய வேறு ஏதும் கழிவுப்பொருள் வகைகள் தவிர்ந்த, வீதியைக் கூட்டிப் பெருக்கும்போதும் பொது இடங்களைத் துப்புரவு செய்யும்போதும் வடிகான்களைச் சுத்தம் செய்யும்போதும் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும் பொதுத் தொட்டிகளிலிருந்து சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களையும், சபையின் பணியாட்கள் சேகரிக்கும் கழிவுப்பொருட்களையும் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளித்தல்;

(ஒ) உணவு மற்றும் ஏனைய உயிரியல் சமிபாட்டு மீள்பாவனைக் கழிவுப்பொருட்களைச் செயற்பாட்டு ரீதியில் இயன்ற அளவில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ பதப்படுத்துவதற்கும் அழுத்துவதற்கும் உரிய வேலைத்திட்டங்களுடன் பிரதேச சபை கழிவுப்பொருள் சேகரிப்பாளர் மூலம் சேகரிக்கப்பட்ட, வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும், இந்தச் செயன்முறைகளிலிருந்து நிராகரிக்கப்படும் மற்றும் இந்தக் கழிவுப்பொருட்களின் ஏனைய எச்சங்கள் என்பவற்றையும் தலைவர் அங்கீகரிக்கும் முறையொன்றுக்கு ஏற்ப வெளியேற்றவும் நடவடிக்கை எடுத்தல்;

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தலைவர் கலந்துரையாடியபின் அங்கீகரிக்கும் முறைக்கேற்ப எல்லா அபாயகரமான கழிவுப்பொருட்களையும் அகற்றச் செய்தல்;

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தையோ அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தையோ பெற்றுக்கொள்வதுடன், குறித்த அனுமதிப்பத்திரத்திலோ அல்லது சுற்றாடல் அனுமதிப்பத்திரத்திலோ விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய கழிவுப்பொருட்களை எரியூட்டுதல் அல்லது சுகாதாரமான வகையில் தரை நிரப்புகையொன்றை நடத்திச் செல்லுதல்;

(க) கழிவுப்பொருட்களைக் கூட்டிப் பெருக்குதல், சேகரித்தல், தெரிவுசெய்தல், வகைப்படுத்துதல், போக்குவரத்து செய்தல், மாற்றுதல் மற்றும் அகற்றுதல் போன்ற கருமங்களில் ஈடுபடும் ஒவ்வொரு பணியாளருக்கும் பொருத்தமான ஆடைகள், கையுறைகள், முகமூடிகள், பாதணிகள் என்பவற்றை வழங்குதல்;

(கா) வீடு அல்லது ஏனைய வளவொன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது திருத்தியமைக்கவோ சபைக்கு விண்ணப்பித்திருக்கும் சந்தர்ப்பத்தில் நிர்மாணம் அல்லது திருத்த வேலையின்போது உற்பத்தியாகும் திண்மக் கழிவுப்பொருட்களை அகற்றும் முறை அல்லது குறித்த வேலை தொடங்கியதும் படிப்படியாக முடிவடையும்போது சக்கைக் கற்கள் மற்றும் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும், அகற்றும் வழிமுறைகள் பற்றிய விபரங்களைப் பரிசீலித்தலும் அனுமதித்தலும்;

(கி) சபையின் வளவுக்கென உள்ளகக் கழிவுப்பொருள் முகாமைக்குரிய திட்டமொன்றைத் தயாரித்தல்;

(கீ) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய தேசிய உபாய வழிகளுக்கும் உரிய சட்டங்களுக்கும் அமையக் குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்துக்குமென விரிவான விளக்கங்கள் கொண்ட இறுதியான அகற்றுதல்கள் சம்பந்தமான எதிர்வரும் 3 ஆண்டுகள் கொண்ட கழிவுப்பொருள் முகாமையைச் செயற்படுத்தும் திட்டமொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும், அந்தத் திட்டத்தை உரிய கால எல்லைக்கு ஏற்றவாறு தொடரொழுங்கின் அடிப்படையில் சபை மூலம் வருடாந்தம் அங்கீகரித்தல்;

(கு) (அ) விலிருந்து (கீ) வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாகத் தலைவருக்குக் கிடைக்கப்பெறும் ஏதும் முறைப்பாடுகள் மீது, ஏற்படவுள்ள தொல்லைகள் பற்றியதாயின் மூன்று நாட்களுக்குள்ளும், ஏனைய முறைப்பாடுகளெனின் பதினான்கு நாட்களுக்குள்ளும் ஆய்வு செய்வதுடன் உடனடியாக நடவடிக்கை எடுப்பது;

**அனுமதிப்பத்திரங்கள்**

23. (i) கழிவுப்பொருட்களை மீள்பயன்பாட்டுக்கோ மற்றும் மீள்சுழற்சிக்கோ பயன்படுத்தும்போது அல்லது கூட்டெரு, உயிர்வாயு அல்லது வேறேதும் தயாரிப்புக்கு உட்படுத்தும் ஒருவர் பின்வரும் அம்சங்களை நிறைவு செய்வாரெனின் அவருக்குச் சபை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்க முடியும்:-

(அ) சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளுக்கேற்ப பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திலோ அல்லது ஏனைய உள்ளூராட்சி அமையப் பிரதேசங்களிலோ ஏதும் தொழில் முயற்சியைச் செய்து வருதல்;

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருத்தல்;

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களுக்கென சபை அனுமதித்த தரத்துக்கு அமைவாக நிர்மாணிக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிக்கும் நிலையங்களை வழங்குதல்;

(ஈ) சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்கள் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாதவாறு சுகாதாரமான முறையில் போக்குவரத்துச் செய்வதற்காக வாகன ஏற்பாடுகளைச் செய்தல்;

(உ) உரிய தொழில் முயற்சியை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்திச் செல்லும்போது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் வண்ணம் குறித்த கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கெனக் கட்டணமொன்றைச் சபையில் செலுத்துவதன் பேரில் கழிவுப்பொருட்களைத் தயாரிக்கும்போது அல்லது அழுத்தும்போது மிஞ்சும் எச்சங்களையோ அல்லது மறுக்கும்போது தோன்றும் துணை உற்பத்திகளாக மாற்றப்படாத கழிவுப்பொருட்களைச் சபை அனுமதித்தவாறு சபையிடம் கையளிக்க இணக்கம் தெரிவித்தல்.

(ii) அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதைச் சபை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது மறுக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வேண்டிக்கொள்வாரெனின், நிராகரிப்புக்கான அல்லது மறுப்பதற்கான காரணங்களை விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்.

(iii) செல்லுபடிக் காலத்துக்குள் சேகரிப்பதற்கெனத் தலைவரால் அனுமதி வழங்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை அல்லது வகையைக் குறித்த கழிவுப்பொருளைச் சேகரிக்க அனுமதி வழங்கப்பட்ட பிரதேசம் மற்றும் ஏனைய பொருத்தமான நிபந்தனைகள் என்பவற்றை அனுமதிப்பத்திரத்தில் குறித்துக் காட்டுதல்.

(iv) இந்தத் துணைவிதியின் (i) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாத வேளைகளில் இந்தத் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

(v) (iv) ஆவது துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒருவர் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல் அல்லது பெறுதல் கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் பொதுமக்களை அறிவூட்டுவதற்காக தலைவர் ஊடகங்கள் வாயிலாகப் போதுமான அளவில் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

**கழிவுப்பொருட்கள் அகற்றப்படும் பிரதேசங்கள்**

24. கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கெனச் சபை ஒதுக்கியுள்ள பிரதேசங்களுக்குள் நுழைவதற்கு அனுமதியில்லாத எவருக்கும் முடியாது. அங்கு நடமாடவும் கூடாது. அப்பிரதேசத்தினுள் ஏதும் பொருட்களையோ அல்லது வீசப்படும் பொருட்களையோ இட்டுவைத்தல், இருக்கும் நிலையை மாற்றியமைத்தல் அல்லது அகற்றுதல் கூடாது. விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய எவரும் சபை அனுமதித்தாலன்றி காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதும் தடைசெய்யப்பட்ட கழிவுப்பொருட்களையும் இட்டுவைத்தல் கூடாது.

25. அங்கீகாரம் வழங்கும் நிபந்தனைகளுக்கமையத் தலைவரது மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினது எழுத்துமூல முன் அனுமதியுடனல்லாது பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள காணியொன்றை அல்லது வசதியொன்றை, அதற்கு வெளியில் உற்பத்தியாகும் கழிவுப்பொருட்களை இட்டுவைத்தலுக்கு வழங்குதல் அல்லது பயன்படுத்துதல் கூடாது.

**ஏனையவை**

26. (i) தலைவர் அல்லது எழுத்துமூலம் அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு நியாயமான எந்த நேரத்திலும் ஏதேனும் ஒரு வளவுக்குள் பிரவேசிக்கவும் அதன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுகின்றாரா எனப் பரிசீலிப்பதற்கும் அதிகாரமுண்டு.

(ii) அந்த வளவின் உரிமையாளர், குடியிருப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அங்கு வசிப்பவர் அல்லது அங்கு பணிபுரிபவர் எவரேனும் தலைவருக்கோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கோ தேவையான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் கீழ் தலைவரோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ தமது அதிகாரங் களைப் பயன்டுத்தும்போது எவரும் அதற்குத் தடையாக இருத்தல் கூடாது.

27. சபை காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய இந்தத் துணைவிதிகளைச் செயற்படுத்தும் எந்தவொரு அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கும் ஊக்குவிப்பு வழங்கப்பட முடியும்.

28. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டையோ, ஒரு சிலவற்றையோ அல்லது அனைத்தையோ மீறுவது அல்லது தகர்ப்பது குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, முறையே பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக் கூடிய உச்ச அளவு தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

**சொற்பத விளக்கம்**

29. இந்தத் துணைவிதியின் கருமங்களுக்கெனச் சொற்பத விளக்கம் தேவைப்பாட்டாலன்றி –

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்" என்பது அவற்றை அகற்றும் ஒருவருக்கு அவற்றால் நுகர்வுப் பெறுமானம் இல்லாத மற்றும் கழிவுகள், குப்பைகள், வீதிகளைச் சுத்தம் செய்யும்போது சேரும் கழிவுப்பொருட்கள், தூசு, மணல், சேறு மற்றும் சாம்பர் எனவும்,

"உணவுக் கழிவுப்பொருட்கள்" என்பது மனித நுகர்வுக்காகப் பயன்படுத்த முடியாத இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை, காய்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப்பொருட்கள் எனவும்,

"தொல்லைதரும் கழிவுப்பொருட்கள்" என்பது மக்களது சுகாதார நலனுக்கோ சுற்றாடலுக்கோ தீங்கு விளைவிக்கும் நச்சுக்களைக் கொண்ட, தீப்பற்றக்கூடிய, எதிர்விளைவுகளைத் தரக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய, கதிரியக்கத் தன்மைகள் கொண்ட கழிவுப்பொருட்கள் எனவும்,

"சேகரித்தல்" என்பது அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர் அல்லது பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளரால் மீள்சுழற்சி, அழுத்துதல், தயாரித்தல் அல்லது அகற்றும் வசதிகளுக்கெனப் போக்குவரத்துச் செய்வதற்காகக் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதையும்,

"கூட்டெரு" என்பது காபனேற்றுக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களது சமிபாட்டின் பின்னர் மாற்றமடையும் இறுதி விளைவுப்பொருளாகும். இது மண்ணின் தன்மையைப் பாதுகாக்கவல்ல மென்மண்ணையும்,

"தலைவர்" என்பது ................................ பிரதேச சபையின் தலைவரையும்,

"களஞ்சியப்படுத்துதல்" என்பது உரிமையாளரது அல்லது குடியிருப்பாளரது வளவுக்குள்ளே அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொது சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் அல்லது இட்டுவைத்தல் என்பதையும்,

"கட்டணம்" என்பது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் ஏதேனும் ஒரு கட்டணத்தையும்,

''வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்'' என்பது வீட்டுத்தோட்டத்துக்குள் காணப்படும் மரங்கள் கன்றுகளிலிருந்து அகற்றப்படும் தாவரப் பகுதிகளையும், கல், மண் போன்றவற்றையும்,

''உயிரியல் சமிபாட்டுக் கழிவுப்பொருட்கள்'' என்பது, நுண்ணுயிர்களால் உக்கலடையச் செய்ய முடியுமான கழிவுப்பொருட்களையும்,

''பொது இடங்கள்'' என்பது பாதை, மைதானம், பொதுக் காணி, பாதைப் பாதுகாப்பிடம், விளையாட்டுத்திடல், பொதுக் கட்டம், மயானம், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, ஏரி, நீர்த்தேக்கம், தடாகம், களப்பு, கிளைநிதி, நீர் செல்லும் வழி, வடிகான், கடல், கடற்கரை அல்லது மக்கள் பொதுவாகப் பயன்படுத்தும் பொதுவான இடத்தையும்,

''மீள்சுழற்சிக் கழிவுப்பொருட்கள்'' என்பது கழிவுப்பொருட்களைக் கழிவுப்பொருட்கள் என மீண்டும் அடையாளம் கண்டுகொள்ள முடியாத வண்ணம் அதன் தோற்றத்தை மாற்றுவதன் மூலம் புதிய நுகர்வுப் பண்டமொன்றை உற்பத்தி செய்யக்கூடிய கழிவுப்பொருட்களையும்,

''மீள்பாவனைக் கழிவுப்பொருட்கள்'' என்பது கழுவப்படுவதாலோ அல்லது கிருமியழித்தலினாலோ அல்லது வேறு முறைகளினாலோ சுத்தப்படுத்திய பின்னர் பயன்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களையும்,

''போக்குவரத்துச் செய்தல்'' என்பது மனித, மிருக அல்லது இயந்திர சக்தியின் மூலம் இயக்கப்படும் ஏதேனும் போக்குவரத்து ஊடகமொன்றைப் பயன்படுத்தி கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நிலையத்திலிருந்து அவற்றைத் தயாரித்தல், அழுத்துதல் அல்லது அகற்றுதல் செய்வதற்காக உள்ள இடம் வரை கொண்டு செல்வதையும்,

''தொட்டி, பாத்திரம் அல்லது கொள்கலன்'' என்பது துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கேற்றவாறு கழிவுப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல், சேகரித்தல் அல்லது போக்குவரத்துச் செய்தல் என்பவற்றுக்கெனப் பயன்படுத்தும் தொட்டி, பாத்திரம், உறை, பை அல்லது ஏனைய கொள்கலன்களையும்,

''அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர்'' என்பது கழிவுப்பொருட்களைச் சேகரிக்க அல்லது பெற்றுக்கொள்ள தலைவரது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள ஒருவரையும்,

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது இந்தத் துணைவிதிகளின் கீழ்வரும் கருமங்களை மேற்கொள்வதற்காக அல்லது செய்வதற்காக தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவரையும்,

''கொண்டு செல்லல்'' என்பது மீள்பாவனை செய்யப்படாத, மீள் சுழற்சி செய்யப்படாத, தயாரிக்கப்படாத, அழுத்தம் செய்யப்படாத எல்லா வகையான கழிவுப்பொருட்களையும் நிரந்தரமாக இட்டுச் செல்லக்கூடிய காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது நிலத்தின் கீழ் இட்டு வைத்தல் என்தையும்,

''மாற்றம் செய்யும் இடம்'' என்பது இந்தக் கருமத்துக்கென சபை விதிக்கும் இடம் எனக் கொள்ளப்படுவதுடன், அந்த இடத்திலிருந்து மீள்சுழற்சி செய்தல், தயாரித்தல் அழுத்துதல் அல்லது கொண்டு செல்லல் என்பவற்றுக்கென வசதியாக அமையும் வண்ணம் போக்குவரத்துச் செய்வதில் செயற்றிறமையை அதிகரிக்கும் நோக்குடன் கழிவுப்பொருட்களை மிகச் சிறிய வாகனங்களைவிட மிகப் பெரிய வாகனங்களிலிருந்து அதிபெரிய வாகனங்களுக்கு மாற்றுதல் செய்வதனையும்,

''ஆள்'' என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அமையம் ஒன்றையும், அல்லது ஆட்களது சங்கத்தையும் அல்லது மன்றத்தையும்,

''பிரதேச சபையின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்'' என்பது தொட்டிகள், கொள்கலன்களில் இருந்து கழிவுப்பொருட்களைக் கூட்டியெடுத்தல், சேர்த்தல், பெற்றுக்கொள்ளுதல் அல்லது அகற்றுதல் என்பவற்றுக்கென சபை ஈடுபடுத்தும் பணியாளரையும் அல்லது அந்தக் கருமத்தை நிறைவேற்றுவதற்காகச் சபையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ள நபரையும்,

''வேறாக்குதல்'' என்பது இந்தத் துணைவிதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வகைகளுக்கேற்றவாறு கழிவுப்பொருட்களைப் பல்வேறு வகைகளாகத் தெரிந்து வேறாக்குவதையும்,

"தயாரித்தல்" என்பது கழிவுப்பொருட்களைப் பயனுள்ள பொருளாக மாற்றியமைக்கும் செயன்முறையையும்,

"சபை" என்பது ...................................... பிரதேச சபையையும்,

"பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசம்" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) கீழ் வெளிப்படுத்தப்படும் பிரதேசங்களையும்,

"சுகாதாரமான தரை நிரப்புதல்" என்பது அதனுடன் தொடர்பான சமூக, சுகாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்களைக் குறைத்துக்கொள்வதற்காக இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களுக்கமைய கழிவுப்பொருட்கள் நிலத்தில் இறுதியாக இடப்படுவதையும்,

"உரிமையளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அட்டோர்ணி அதிகாரத்தைக் கொண்டிருப்பவர் அல்லது உரிமையளரால் தமது கைத்தொழிலை, தொழிற்சாலையை தோட்ட முகாமைக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதியை, அல்லது பொறுப்பாளரை அல்லது வாடகைக்குப் பெற்றிருப்பவரை அல்லது ஒருவரது கட்டளையின் கீழ் செயற்படும் முகாமையாளரையும் குறிப்பிடும்.

*07-389/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.